உடன்பாடும் முரண்பாடும்

(அடிப்படைகளும் சட்டங்களும்)

அரபியில் : ஸாலிஹ் இப்னு கானிம் அஸ்ஸஜ்லான்

தமிழில் : MBM. இஸ்மாயில் (மதனி)

உடன்பாடும் முரண்பாடும்

(அடிப்படைகளும் சட்டங்களும்)

அரபியில்: ஸாலிஹ் இப்னு ஹானிம் அஸ்ஸஜ்லான்
(இஸ்லாமிய சட்டக்கலைப் பிரிவின் உயர் கற்கை நெறிகளுக்கான ஆசிரியர், இமாம் முஹம்மத் இப்னு ஸுஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம் - ரியாத்)

தமிழில்: M.B.M. **இஸ்மாயில் (மதனி)**
(அதிபர், தாருஸ்ஸலாம் அரபுக் கல்லூரி, வாழைச்சேனை.)

முன்னுரை.

மு.ஃ.மின்களை சகோதரர்களாக ஆக்கிய அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். ஈமானிய சகோதரர்களாக இருப்பதே மிகச் சிறந்த சகோதரத்துவம். அவர்களுடைய உள்ளங்களுக்கு மத்தியிலே அல்லாஹ் ஒற்றுமையை ஏற்படுத்தினான். அவர்கள் பிரிந்து கிடந்ததற்கு பிறகு அவர்களை பலமான கட்டிடம் போன்று அமைத்தான். அல்லாஹ்வை அதற்காக நாங்கள் புகழுகிறோம். இஸ்லாமிய சமூகத்தை மனித சமூகத்திற்காக வெளியேற்றப்பட்ட சமூகங்களிலே சிறந்த சமுதாயமாக அவன் ஆக்கினான். ஏனையவர்களை விடவும் அவர்களை சிறப்பித்தான். அல்லாஹ்விற்கு அதற்காக நன்றி செலுத்துகிறோம். தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு அவனுடைய அடியார்களான மு.ஃ. மின்களின் உள்ளங்களை விசாலப்படுத்தினான். தெளிவான ஆதாரங்களைக் கொண்டு சத்தியத்தின் அழைப்பாளர்களை உறுதிப்படுத்தினான். மனோ இச்சைகளைப் பின்பற்றுவதை விட்டும் அவனுடைய தௌபீக்கைக் கொண்டும் அவனுடைய பாதுகாப்பைக் கொண்டும் அவர்களுடைய உள்ளங்களை ஒளியேற்றினான். மேலும் அவனுடைய தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதே நாங்கள் ஸலவாத்தும் ஸலாமும் சொல்கிறோம். அவர் அல்லாஹ்வுடைய பாதையின் பால் சிறந்த உபதேசங்களைக் கொண்டும் மிக நுட்பமான அறிவைக் கொண்டும் மக்களை அழைத்தார். அவருடைய குடும்பத்தார், தோழர்கள், நல்ல முறையில் மறுமை நாள் வரை அவரை பின்பற்றி நடப்போர் அனைவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக.

நிச்சயமாக உள்ளங்களும் உணர்வுகளும் ஒற்றுமைப்படுவதும், இலக்குகளும் போக்குகளும் ஒற்றுமைப்படுவதும் இஸ்லாமிய கடமைகளில் மிகவும் தெளிவான ஒன்றாகும். மேலும் இறைவனை மாத்திரம் நம்பியிருக்கக் கூடிய முஸ்லிம்களை அல்லாஹ் கட்டாயப்படுத்திய விடயமுமாகும். இஸ்லாமிய சமூகம் நிலைத் திருப்பதற்கான மிகப் பலமான தூணாகவும் அது உள்ளது. அதனுடைய ஆட்சி நிலைத்திருப்பதற்கும் அதனுடைய தூதுச் செய்தி வெற்றியடைவதற்கும் அதனுடைய சக்தியின் ரகசியமாகவும் அதனுடைய கௌரவத்தின் ஊற்றாகவும் காணப்படுகிறது.

அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் என்ற தௌஹீதுக்கு அடுத்ததாக ரஸூல்மார்கள் கொண்டு வந்த மிக முக்கியமான விடயம் ஒற்றுமையாகும். மேலும் பிரிந்திருப்பவைகளை ஒன்றிணைத்தல், உறவுகளை சீர்செய்தல் என்பவையுமாகும். நிச்சயமாக அல்லாஹ்வுடைய பேச்சு இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே வந்துள்ளது. ஒரு தனி மனிதனுக்கு மாத்திரம் அல்லாஹ் ஏவல் விலக்கல்களை முன் வைக்கவில்லை. மாறாக இஸ்லாமிய சமூகத்தின் ஒவ்வொருவரையும் ஒழுங்குபடுத்துதல், வழிகாட்டுதல் எனும் அடிப்படையிலேயே வழங்கியுள்ளான்.

அல்லாஹ் சொல்கிறான்: “விசுவாசம் கொண்டவர்களே ருகூஉ செய்யுங்கள், சுஜூது செய்யுங்கள், உங்களுடைய இரட்சகனை வணங்குங்கள், நல்லவற்றை செய்யுங்கள் வெற்றியடைவீர்கள் அல்லாஹ்விலே முறையான ஜிஹாதை நீங்கள் செய்யுங்கள் (22:77,78)

இஸ்லாத்தின் நுழைவாயிலாக அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் எனும் கலிமதுத் தௌஹீத் இருப்பதைப் போல அதனுடைய

பலமாகவும் அதனுடைய பயனாகவும் ஒற்றுமை மற்றும் அல்லாஹ்வுடைய ஏவல்களை எடுத்து நடத்தல், அவனுடைய விலக்கல்களை அவனுக்காக கட்டுப்பட்டு தவிர்ந்து கொள்ளுதல் அவனிடம் இருக்கின்றவற்றை ஆதரவு வைத்து அவனுடைய ஏவல்களுக்கு அடிபணிதல் அமைந்திருக்கின்றது.

அல்லாஹ் சொல்கிறான். ‘‘அல்லாஹ்விற்காக மாத்திரம் மார்க்கத்தை தூய்மைப்படுத்தியவர்களாக வணங்குமாறே அவர்கள் ஏவப்பட்டிருக்கிறார்கள். மேலும் தொழுகையை நிலை நாட்டுமாறும் ஸகாத்தை கொடுக்குமாறும் ஏவப்பட்டுள்ளனர். அதுவே உறுதியான நிலையான மார்க்கமாகும்.’’ (98:05)

ஆம். இந்த சமூகத்தை சத்தியத்தில் ஒற்றுமைப்படுமாறு அல்லாஹ் ஏவியுள்ளான். முன்சென்ற சமூகங்களில் நடந்ததைப் போல முரண்பாடுகள், பிரிவினைகளை விட்டும் அவர்களை எச்சரித்துள்ளான்.

அல்லாஹ் சொல்கிறான். ‘‘அல்லாஹ்வின் கையிற்றை அனைவருமாகச் சேர்ந்து பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதில் நீங்கள் பிரிந்து விடாதீர்கள்.’’ (03:103)

மேலும் அல்லாஹ் சொல்கிறான்: ‘‘தெளிவான சான்றுகள் வந்ததன் பிறகு கருத்து முரண்பாடு கொண்டவர்களைப் போன்று நீங்கள் ஆகிவிட வேண்டாம். அவர்களுக்கு மிகக் கடுமையான வேதனை உண்டு.’’ (03:105)

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள். ‘‘அல்லாஹ் ஒற்றுமையாக இருக்குமாறு அவர்களை ஏவியுள்ளான். பிரிவினையை விட்டும் அவர்களை தடுத்துள்ளான்.நிச்சயமாக

அல்லாஹ் தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும் ஏனைய மார்க்கங்கள் அனைத்தையும் மிகைக்கின்ற சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பினான். அவருடைய மார்க்கம் ஒன்றுதான். அதில் கருத்து முரண்பாடு கிடையாது. அதில் பிளவுகள் கிடையாது''

யார் அதிலே முரண்பட்டானோ அவன் வழிகெட்டான். அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் அவனுடைய நேரிய பாதையை விட்டும் மக்களை வழிகெடுத்தான். அவனுடைய மார்க்க விவகாரங்களை ஷைத்தான் குழப்பி விட்டான். மனோ இச்சைகளை அவன் பின்பற்றினான். முரண்பாடுகள் அவனை மூடிக்கொண்டன.

முந்திய சமூகங்களினுடைய குறைகளிலே நாங்கள் விழுந்து விடுவதை விட்டும் எங்களுடைய இரட்சகன் எங்களை எச்சரித்துள்ளான். படிப்பினைக்காகவும் எச்சரிக்கைக்காகவும் அவர்களுடைய வரலாறுகளை எங்களுக்கு சொல்லியுள்ளான். அல்லாஹ் சொல்கிறான்: ''நீங்கள் அவன் பக்கமே மீண்டவர்களாக அவனை அஞ்சி நடந்து, தொழுகையையும் நிலை நாட்டுங்கள். மேலும் இணைவைப்பாளர்களில் நீங்கள் ஆகிவிட வேண்டாம். எவர்கள் தங்கள் மார்க்கத்தை பிரித்து பல குழுக்களாக ஆகி விட்டார்களோ அவர்களிலும் நீங்கள் ஆகிவிட வேண்டாம். ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடம் இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர்.'' (30:31,32)

மேலும் அல்லாஹ் சொல்கிறான். ''எவர்கள் தமது மார்க்கத்தை பிரித்து பல பிரிவுகளாக ஆனார்களோ அவர்களின் எவ்விடயத்திலும் நீர் இல்லை. அவர்களின் விடயம் அல்லாஹ்விடமே உள்ளது.

பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி அவர்களுக்கு அவன் அறிவிப்பான்.'' (06:159)

மேலும் அல்லாஹ் சொல்கிறான். ''நிச்சயமாக அல்லாஹ் சத்தியத்தைக் கொண்டு இவ்வேதத்தை இறக்கி இருக்கும் போது அதை மறைப்பது தான் இதற்குக் காரணமாகும். மேலும் வேதத்தில் முரண்பட்டுக் கொண்டோர் நிச்சயமாக வெகு தூரமான பிளவில் இருக்கின்றனர்.'' (02:176)

பிரிவினை, ஒற்றுமையை சிதைப்பதற்கு காரணமாக அமைகின்ற முரண்பாடுகள் நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல், தூதுச் செய்தி, இஸ்லாமிய மார்க்கத்தின் போதனைளை விட்டும் தூரமானதாகவே கருதப்படுகிறது. இதன்படி யார் இஸ்லாமிய மார்க்கத்தில் முரண்பட்டார்களோ அவர்கள் அல்லாஹ் சொல்வதைப் போல பல பிரிவுகளாக ஆகிவிட்டனர். அதாவது முந்திய மதங்கள், சிந்தனைகள், பிரிவுகள், வழிகேடுகள் போல பல பிரிவுகளாக மார்க்கத்தைப் பிரித்துக்கொண்டவர்களை விட்டும் நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய தூதரை நீக்கி விட்டான். அல்குர்ஆனிலே அதிகமான இடங்களில் ஒற்றுமைப்படுமாறும் ஐக்கியமாக இருக்குமாறும் ஒருவருக்கொருவர் உதவுமாறும் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் வழி காட்டியுள்ளான். மேலும் ஒற்றுமை எனும் தங்களுடைய கட்டிடம் பலமாக இருப்பதற்காகவும், அவர்களுடைய அணி நெருக்கமாக இருப்பதற்காகவும், அவர்களுடைய முயற்சிகள் பயன் தரக்கூடியதாக இருப்பதற்காகவும், நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி அல்லாஹ்வுடைய கட்டளைகளை ஏற்று மிக நேரிய பாதையில் பயணிக்குமாறு அல்லாஹ் ஏவியுள்ளான்.

முஸ்லிம்கள், மிக நுட்பமான இந்த வழிகாட்டல்கள், பயன்மிக்க போதனைகளை பின்பற்றியவர்களாக இருந்த நாட்களில் உயர்ந்த புகழையும் மிக உறுதியான கன்னியத்தையும் அடைந்து கொண்டார்கள். உலகின் பலபாகங்களிலும் இஸ்லாத்தை பரப்பினார்கள். ஆச்சரியத்தக்க அடிப்படையிலே நாடுகளை வெற்றி கொண்டார்கள். ரோமின் மன்னர்களையும் வல்லரசுகளையும் கட்டுப்படுத்தினார்கள். அல்லாஹ்வின் அடியார்களை வழிப்படுத்தினார்கள். மேலும் மிகப்பலம் பொருந்தியவர்களாக இருந்தார்கள். அரை நூற்றாண்டையும் விட மிக குருகிய காலத்தில் உலகின் கிழக்கையும் மேற்கையும் ஆட்சி செய்பவர்களாக மாறினார்கள்.

நிச்சயமாக எமது இஸ்லாமிய சமுதாயம் குறிப்பாக மிகக் கடினமான இந்த காலகட்டத்திலே பலவீனத்தையும், மிகக் கடுமையான பிளவுகளையும் எதிர் நோக்கி உள்ளது. அவைகள் உலகின் முன்னேறிய சமூகங்களை விடவும் கீழானவர்களாக முஸ்லிம்களை ஆக்கியுள்ளது. மிகக் கஸ்டமான நாட்களை அவர்கள் கடந்து சென்றுள்ளனர். தொடர்ச்சியான இன்னல்களையும் இடர்களையும் அவர்கள் கடந்துள்ளனர். தங்களுடைய வீடுகள், தங்களுடைய சொத்துக்கள் இல்லாத போதிலும் பாதுகாப்பு மற்றும் அமைதியை அதனோடு அவரகள் இழக்கப்பார்த்தனர். அல்லாஹ் சொல்கிறான் “நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான பாதையாகும். அதையே நீங்கள் பின்பற்றுங்கள். அதை விடுத்து ஏனைய வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவனுடைய பாதையை விட்டும் அவை உங்களைப் பிரித்து விடும். (06:156)

இஸ்லாமிய சமூகத்தினுடைய அறிஞர்கள், முக்கியஸ்தர்கள், தலைவர்கள், பெரியவர்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள இந்தப்

பிரிவினை தான் அவர்களுடைய எதிரிகள் அவர்களை ஆக்கிரமிப்பதற்கு காரணமாகியுள்ளது. நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படுவதை விட்டு விட்டார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்: “நிச்சயமாக நாம் கிறிஸ்தவர்கள் என்று கூறியவர்களிடம் அவர்களின் உடன்படிக்கையை நாம் எடுத்தோம். பின்னர் தமக்கு உபதேசிக்கப்பட்டவற்றில் ஒரு பகுதியை அவர்கள் விட்டுவிட்டனர். அதனால் அவர்களிடையே மறுமை நாள் வரை பகைமையையும், குரோதத்தையும் உண்டு பண்ணினோம். அவர்கள் செய்து கொண்டிருப்பவற்றை அல்லாஹ் அவர்களுக்கு அறிவிப்பான்.”

“அல்லாஹ் ஏவியவற்றில் சிலதை மனிதர்கள் எப்போது விட்டுவிட்டார்களோ அப்போதே அவர்களுக்கு மத்தியில் விரோதமும் குரோதமும் ஏற்பட்டு விட்டது. இஸ்லாமிய சமுதாயம் பிரிந்தால் அவர்கள் சீர்கெட்டு அழிந்து போவார்கள். அவர்கள் ஒற்றுமைப்பட்டால் சீரபெற்று ஆட்சியதிகாரத்தையும் பெறுவார்கள். நிச்சயமாக ஒற்றுமை என்பது அருளாகும். பிரிவினை என்பது தண்டனையாகும்.”

பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய கருத்து முரண்பாடுகள், பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய பொய்யான பரப்புரைகள், சமூகத்தின் ஒற்றுமையை சிதைக்கக் கூடிய அடிப்படைகளின் பக்கம் சென்று, நேரான இந்த பாதையை விட்டும் எப்போது நெறிபிரழ்ந்தார்களோ அன்றே முஸ்லிம்கள் பல பிரிவுகளாக பிரிந்து விட்டனர். பல குழுக்களாக ஆகி விட்டனர். அவர்களுடைய புகழ் சென்று விட்டது. அவர்களுடைய நிலைகள் இறுகிவிட்டன.

அவர்கள் மீது இச்சைகள் தாக்கம் செலுத்தி விட்டது. அதனால் அவர்கள் பல பிரிவுகளாக பிரிந்துவிட்டனர். அவர்களுடைய எதிரிகளில் மிக அற்பமான சமூகங்கள், மிக இழிவான சமூகங்களுக்கும் அவர்களை வெற்றி கொள்வது இலகுவானதாக மாறிவிட்டது.

ஏனைய குழுக்களும், மதங்களும், பிற சிந்தனைகளும் முஸ்லிம்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்கின்றவர்களாக, அவர்களுடைய நாடுகளுக்கு உள்ளேயே அவர்களுடன் போராடுகின்றவர்களாக மாறிவிட்டனர். முஸ்லிம்களின் வளங்களை பங்கு வைக்கின்ற வர்களாக ஆகிவிட்டனர். முஸ்லிம்களை மிக அற்பமானவர்களாக அவர்கள் கருதுகின்றனர். அவர்களின் கௌரவங்கள் சிதைக்கப்படுகின்றன. அவர்கள் அதை பாதுகாப்பதில்லை. அவர்களுக்கு எதிராக அநியாயமிழைக்கப்படுகின்றன. அவர்களை முஸ்லிம்கள் தடுப்பதில்லை. அவர்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள். அவற்றை அவர்கள் ஒரு பொருட்டாக கருதுவதில்லை.

ஆனால், நேற்று வரை நிலையான கண்ணியமும், உயர்வான இலக்குகளும், மகத்தான முன்னேற்றத்திற்குரியவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இதன் காரணமாகவே இந்த அவசர நேரத்திலே உடன்பாடும் முரண்பாடும் அடிப்படைகளும் அதன் விதிகளும் என்ற தலைப்பிலே இந்த நூலை எழுதுவதற்கு நான் கருதினேன். நிச்சயமாக மிக கஷ்டமான இந்த காலகட்டத்தில் முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதும் பிரிவினைகளை இல்லாமல் செய்வதும் முஸ்லிம்களுக்கு மத்தியில் போராட்டத்தை உருவாக்கி முஸ்லிம்களுடைய சக்திகளை விரையமாக்கக்கூடிய காரியங்களை தடுப்பதும் அவசியமாகும். மீண்டும் இஸ்லாமிய வாழ்க்கையை

கொண்டு வருவதற்கான தனித்துவமான வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை நோக்கி முஸ்லிம்களுடைய முயற்சிகளை ஒன்றிணைப்பதும் அவசியமாகும்.

அல் இ.்.திலாப் (உடன்பாடு) அல் இஹ்திலாப் (முரண்பாடு) என்றால் என்ன?

அல் இ.்.திலாப், அல் இஹ்திலாப்:

'அல் இ.்.திலாப்' என்ற பதம் ஒற்றுமை, கருத்து முரண்பாடின்மை, உடன்பாடு போன்ற கருத்துக்களை குறிக்கிறது. மொழித்துறை அறிஞர் இப்னு பாரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: "அல்லப என்ற சொல் ف.ل.أ என்ற எழுத்துக்களைக் கொண்ட அடிப்படையாகும். இது ஒன்றுடன் ஒன்றை இணைத்தல் அல்லது ஒன்றுடன் பலதை இணைத்தல் என்ற கருத்தை கொடுக்கிறது. 'இஹ்திலாப்' என்ற சொல் 'இஹ்தலப' என்ற சொல்லின் அடியாகும். 'இஹ்திலாப்' என்பது உடன்படுதல் என்பதற்கு நேர் எதிரான கருத்தை கொண்டது. இரண்டு மனிதர்கள் ஒருவருக்கொருவர் உடன்படவில்லை என்ற கருத்தை கொடுக்கும் உடன்பாடு இல்லாத ஒன்றைக் குறிப்பதற்கு இஹ்தலப என்ற சொல்லை பயன்படுத்த முடியும். ஒவ்வொரு மனிதனும் அடுத்தவருக்கு முரணான வழியை பின்பற்றுகிறார்கள். தன்னுடைய நடத்தையிலோ அல்லது தன்னுடைய வார்த்தையிலோ ஒவ்வொரு மனிதனும் அடுத்தவர்களுக்கு முரண்படுகின்ற ஒரு வழியை பின்பற்றுவதை முஹாலபா அல்லது இஹ்திலாப் என்று அழைக்கப்படுகின்றது."

12 தொடக்கம் 14 வரையான பக்கங்கள் முரண்பாடு, பிரிவினை, உடன்பாடு போன்ற வார்த்தைகளுக்கான அரபுச் சொற்கள் பற்றிய விரிவான இலக்கண ஆய்வை உள்ளடக்கி இருப்பதனால் அதனுடைய பயன் கருதி அவை இங்கு தமிழாக்கப்படவில்லை.

ஒற்றுமை, உடன்பாடு, ஐக்கியம் என்பவற்றை இஸ்லாம் தூண்டுகின்றது கருத்து முரண்பாடு, பிரிவினையை தடை செய்கின்றது.

முரண்பாட்டை தடை செய்கின்ற முரண்பாடுகளினுடைய விபரீதங்களை விட்டும் எச்சரிக்கை செய்கின்ற, ஒற்றுமை, உடன்பாடு, ஐக்கியம் என்பவற்றை ஏவுகின்ற அதிகமான ஹதீஸ்களும் குர்ஆன் வசனங்களும் அறிஞர்களுடைய கூற்றுக்களும் வந்திருக்கின்றன.

அல்லாஹ் சொல்கின்றான்: ‘‘அல்லாஹ்வின் கயிற்றை நீங்கள் அனைவரும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதில் பிரிந்து விடாதீர்கள்.’’ (03:103)

அல்லாஹ்வினுடைய கையிற்றை பற்றி பிடித்துக்கொள்ளுதல் என்பது சத்தியத்தின் மீது ஒற்றுமைப்படுதல், நன்மையான காரியங்கள், அல்லாஹ்வுடைய எதிரிகள் மற்றும் முஸ்லிம்களுடைய எதிரிகளுக்கு எதிராக ஒருவருக்கொருவர் உதவி செய்தல், நன்மையை ஏவுதல் தீமையை தடுத்தல் என்பவற்றில் ஒருவருக் கொருவர் உதவியாக இருப்பதைக் குறிக்கின்றது.
‘‘பிரிந்து விடாதீர்கள்’’ என்ற அல்குர்ஆனின் வார்த்தையை இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) அவர்கள் விளக்கும் போது பின்வருமாறு கூறுகிறார்கள்: ‘‘அதாவது அல்லாஹ்வுடைய மார்க்கத்தை விட்டும் அவன் உங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை விட்டும் நீங்கள் பிரிந்து விடாதீர்கள். அல்லாஹ்விற்கு வழிபடுதல்

அல்லாஹ் உடைய தூதருக்கு வழிப்படுதல் பிரச்சனைகளின் போது அவர்கள் இருவரிடமும் மீளுதல் அதில் ஐக்கியமாக இருத்தல் ஒற்றுமைப்படுதல் என்று அல்லாஹ் உங்களுக்கு ஏவிய விடயங்களில் நீங்கள் பிரிந்து விடாதீர்கள் என்பதாகும்.'' இமாம் கதாதா (ரஹ்) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படும் ஒரு செய்தியில் அவர்கள் சொல்கிறார்கள்: நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் பிரிந்து விடுவதை வெறுக்கின்றான். அதை விட்டும் உங்களை எச்சரிக்கை செய்கின்றான். பிரிவினையை விட்டும் உங்களை தடுக்கின்றான். நீங்கள் செவிசாய்த்து கட்டுப்பட்டு ஒற்றுமையாக ஐக்கியமாக இருப்பதை அவன் பொருந்திக் கொண்டான். அல்லாஹ் உங்களை எதில் பொருந்திக் கொண்டானோ அதை உங்களால் முடியுமான அளவு பொருந்திக் கொள்ளுங்கள். நிச்சயமாக எந்த ஒரு நன்மையை செய்வதாயினும் மகத்தான உயர்வான அந்த அல்லாஹ்வின் உதவியின்றி செய்ய முடியாது.

அல்லாஹ் சொல்கிறான்: ''அவன் எதனை நூஹுக்கு உபதேசித்தானோ அதையே உங்களுக்கும் மார்க்கமாக ஆக்கினான். மார்க்கத்தை நிலை நாட்டுங்கள். அதில் பிரிந்து விடாதீர்கள் என்பதே உமக்கு நாம் வஹியாக அறிவித்ததும் இப்ராஹீம், மூசா, ஈஸா ஆகியோருக்கு உபதேசித்ததுமாகும். நீங்கள் எதன்பால் அழைக்கப்படுகின்றீர்களோ அது இணைவைப்பாளர்களுக்கு பழுவாக இருக்கின்றது. அல்லாஹ் தான் நாடுபவரை தன்பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். மேலும் தன்னிடம் மீள்வோரை நேர்வழியில் செலுத்துகின்றான்.'' (42:13)

நிச்சயமாக அல்லாஹ்வுடைய உறுதியான மார்க்கத்திலே பயணிக்கின்ற மு.்.மின்களுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற பலமான கயிறு அவனுடைய மார்க்கத்தை

தவிர வேறு எதுவும் கிடையாது. மேலும் அவர்களுக்கு மத்தியில் பிளவுகளையும் பிரிவினைகளையும் இல்லாமல் செய்வதும் அல்லாஹ்வுடைய உறுதியான இந்த மார்க்கமேயாகும்.

அல்லாஹ்வுக்கு எம்மை நெருக்கமாக்கி வைக்கின்ற காரியங்களை செய்யுமாறு அது ஏவுகின்றது. மேலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருத்தல், உடன்படுதல், நிகழ்காலத்தை சென்ற காலத்துடன் இணைத்தல், சென்ற காலத்தை நிகழ்காலத்துடன் இணைத்தல், அனைவருமாக இந்த வழியில் பயணித்தல் என்பவற்றின்பால் அழைக்கின்ற மிக உறுதியான கயிறு அல்லாஹ்வுடைய மார்க்கமாகும்.

எனவே, இவ்வாரிருக்கையில் எங்களுக்கு மத்தியில் ஏன் முரண்பாடுகள் வரவேண்டும்? காழ்ப்புணர்ச்சிகள் ஏற்பட வேண்டும்? பிரச்சினைகள் ஏற்பட வேண்டும்? ஒருவருக்கொருவர் ஏன் கோபம் கொள்ள வேண்டும்? அல்லாஹ்விடமிருந்து எல்லோருக்கும் வந்திருக்கின்ற உபதேசம் ஒன்றுதான். அல்லாஹ் சொல்லுகிறான் “நீங்கள் மார்க்கத்தை நிலை நாட்டுங்கள் அதிலே பிரிந்து விடாதீர்கள்”

எனவே இறை விசுவாசிகள் அல்லாஹ்வுடைய மார்க்கத்தை நிலை நாட்டுவார்கள் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய பொறுப்புகளை செய்வார்கள். அவர்கள் அதை விட்டும் தடம் புரள மாட்டார்கள். அதைக் கொண்டு அங்குமிங்குமாக சுற்றமாட்டார்கள். மாறாக அதன் போதனைகளுக்கு கீழே ஒரே அணியாக எல்லோரும் நிற்பார்கள். அது ஒரே கொடியாகும். அதனை தொடர்ச்சியாக நூஹ் (அலை) இப்ராஹீம் (அலை) மூஸா (அலை) என்று இறுதியாக நபி (ஸல்) அவர்கள் வரை அனைவருமே உயர்த்திப் பிடித்தார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்: ‘‘மனிதர்கள் ஒரே சமுதாயமாகவே இருந்தனர். பின்னர் (கருத்து வேறுபாடு தோன்றவே) நன்மாராயம் கூறுபவர்களாகவும், எச்சரிக்கை செய்பவர்களாகவும் நபிமார்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். மனிதர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ள விடயங்களில் அவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக சத்தியத்தைக் கொண்ட வேதத்தையும் அவர்களுடன் இறக்கி வைத்தான். தமக்குள் காணப்பட்ட பொறாமை காரணமாகவே வேதம் கொடுக்கப்பட்டோர் தெளிவான சான்றுகள் தம்மிடம் வந்த பின்னரும் அவ்வேதத்தில் முரண்பட்டுக் கொண்டனர். எந்த சத்தியத்தில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அதில் நம்பிக்கை கொண்டோருக்கு அல்லாஹ் தனது நாட்டப்படி நேர்வழியைக் காட்டினான். இன்னும் அல்லாஹ் தான் நாடுவோரை நேரான வழியில் செலுத்துகின்றான்.’’ (02:213)

மேலும் அல்லாஹ் சொல்கிறான்: ‘‘நிச்சயமாக அல்லாஹ் சத்தியத்தைக் கொண்டு இவ்வேதத்தை இறக்கி இருக்கும் போது அதை மறைப்பது தான் இதற்குக் காரணமாகும். மேலும் வேதத்தில் முரண்பட்டுக் கொண்டோர் நிச்சயமாக வெகுதூரமான பிளவில் இருக்கின்றனர்.’’ (02:176)

எனவே, அல்லாஹ் தனது நபிமார்கள் ரசூல்மார்கள் மீது இறக்கி வைத்த அவனுடைய மார்க்கத்தை பின்பற்றுதல் என்ற உண்மையான ஈமான் உடன்பாடு மற்றும் கருத்தொற்றுமை என்பவற்றை வேண்டி நிற்கின்றது. அல்லாஹ் இறக்கி வைத்த அந்த மார்க்கத்தைக் கொண்டு நேர்வழி பெறுவதை விட்டுவிடுவது முரண்பாடுகளையும் பிரிவினைகளையும் உருவாக்குகின்றது. நிச்சயமாக வேதம் கொடுக்கப்பட்டவர்கள் அவர்களிடமிருந்த குறைவான அறிவினாலோ, சொற்பமான விளக்கங்களினாலோ

அவர்கள் அழிக்கப்படவில்லை. நிச்சயமாக அவர்களிடமிருந்த கல்வியை, அறிவை அவர்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்வதற்கு பயன்படுத்திக் கொண்டதனால் அழிக்கப்பட்டார்கள்.

அல்லாஹ் சொல்கிறான் "அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸலாம் தான். வேதம் கொடுக்கப் பட்டோர் தமக்கு அறிவு வந்த பின்னரும் தமக்குள் காணப்பட்ட பொறாமையின் காரணமாகவேயன்றி முரண்படவில்லை. எவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் விசாரனை செய்வதில் தீவிரமானவன்." (03:19)

இங்கு தான் எனக்கு ஒரு கேள்வி எழுகின்றது. அல்லாஹ்வுடைய வேதத்தை அனந்தரமாக பெறுவதற்கு பகரமாக நாம் அஹ்லுல் கிதாபுகளுடைய குறைகளை வடுக்களை அனந்தரமாக பெற்றுக் கொண்டோமா? அறிவையும் கல்வியையும் அனந்தரமாகப் பெற்று அது போதிக்கின்ற பண்பாடுகளை பின்பற்றுவதற்கு பதிலாக மார்க்கத்தை பிரித்தல், பிளவுபடுதல், ஒருவருக்கொருவர் அநியாயம் செய்தல் எனும் வேதம் கொடுக்கப்பட்டவர்களின் பண்பாடுகளை அனந்தரமாக பெற்றுக் கொண்டோமா? சிலபோது எங்களிடம் அறிவும் விளக்கமும் அதிகமாக இருக்கலாம். அந்த அறிவை நாங்கள் அதிகம் சம்பாதித்துக் கொண்டோம். ஆனால், அது சொல்கின்ற பண்பாடுகளை நாங்கள் இழந்து விட்டோம். எங்களிடம் சாதனங்கள் இருக்கின்றது. ஆனால், அதன் மூலம் சென்றடைய வேண்டிய இலக்குகள் நோக்கங்களை நாங்கள் வீணடித்து விட்டோம்.

ஆகுமான விரும்பத்தக்க காரியத்தை பற்றிய எங்களுடைய முரண்பாடுகள் அவசியமான கட்டாயம் செய்ய வேண்டிய ஒரு விடயத்தை எங்களிடம் இல்லாமல் செய்து விட்டது. நாங்கள் முரண்பாட்டுக்குரிய கலையை நன்றாக கற்றுள்ளோம். ஆனால், அதற்குரிய ஒழுங்குகளை இழந்து விட்டோம். இதனால், எங்களுக்கு மத்தியில் பிரச்சினைகளும் பிளவுகளும் ஏற்பட்டுவிட்டன. அதன் விளைவாக எங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் வீழ்த்துகின்ற, கொலை செய்கின்ற நிலைகள் உருவாகிவிட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ் சொல்கிறான்: “அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் இருந்து செலவும் செய்வார்கள்” (06:03)

இந்த வசனம் பத்ர் யுத்தத்திலே இறங்கியது. இது பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்கள் வெற்றி அடைந்ததற்கு பிறகு அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய முதலாவது உபதேசமாகும். அவர்களை ஒற்றுமையாக இருக்குமாறும் அவர்களுடைய அணிகளை ஒற்றுமைப்படுத்திக் கொள்ளமாறும் இந்த வசனத்திலே அல்லாஹ் ஏவுகின்றான். அவர்கள் பத்ர் களத்தில் கிடைத்த கனீமத் பொருட்களில் ஆசை கொண்டு அவைகளை அதிகம் சேகரிக்க முயற்சித்த போது கனீமத் பொருட்களினுடைய பங்குகளை அடைந்து கொள்வதற்கு போட்டி போட்ட போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

பின்பு அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதில் அவனுக்கு வழிப்படுவதில் ஒற்றுமைப்படுவதுதான் உத்தரவாதமளிக்கப்பட்ட வெற்றியாகும். அடுத்தவர்களை அச்சுறுத்துகின்ற பலத்தைப் பெருவதற்கான

ஒரே வழி என்பதை அவர்களுக்கு அல்லாஹ் தெளிவு படுத்துகின்றான்.

அல்லாஹ் சொல்கிறான்: “நீங்கள் ஒருவருக்கொருவர் முரண்படாதீர்கள் தோற்றுவிடுவீர்கள் மேலும் உங்களுடைய வெற்றியும் உங்களுடைய பலமும் சென்றுவிடும்.” (08:46)

பின்பு, உஹுதுக்களத்தில் முஸ்லிம்களை பலமாக தாக்கிய அவர்களுக்கு வேதனை ஏற்படுத்திய ஒரு அடி அவர்களுக்கு விழுந்தது. அதன் மூலம் அவர்கள் 70 வீரர்களை இழந்தார்கள். மேலும் நிராகரிப்பாளர்களுக்கு வெற்றியை கொடுத்து தோல்வியினுடைய வெட்கத்தினால் பலவீனத்தை அனுபவித்தவர்களாக மதீனாவுக்கு அவர்களை திரும்பவும் அனுப்பி வைத்தது.

அவர்கள் அல்லாஹ்வை நிச்சயமாக ஈமான் கொண்டிருந்தார்கள். சத்தியத்திற்காகவே அவர்கள் போராடினார்கள். அதுவே அவர்களுக்கு தெளிவான வெற்றி கிடைப்பதற்கு போதுமானதாகும். அப்படி இருந்த போதிலும் ஏன் இந்த நிலையை உஹுதிலே அவர்கள் சந்தித்தார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுக்கு மத்தியில் முரண்பட்டார்கள். பிரிந்தார்கள். அல்லாஹ்வுடையவும் அவனுடைய தூதருடைய கட்டளைக்கு மாறு செய்தார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்: “அல்லாஹ்வின் உதவியினால் உஹுதுப் போரில் அவர்களை வெட்டி வீழ்த்திய போது அவன் தன்னுடைய வாக்கை உங்களுக்கு நிச்சயமாக உண்மைப்படுத்தினான். நீங்கள் விரும்புவதை அவன் உங்களுக்கு காண்பித்த பின்னரும் நீங்கள் மாறு செய்து இவ்விடயத்தில் தர்க்கித்ததால் தளர்ந்து போனீர்கள்.

உங்களில் இவ்வுலகத்தை விரும்புவோரும் இருக்கின்றனர். மேலும் உங்களில் மறுமையை விரும்புவோரும் இருக்கின்றனர். பின்னர் உங்களை சோதிப்பதற்காக அவர்களை விட்டும் அவன் உங்களைத் திருப்பி விட்டான். நிச்சயமாக அவன் உங்களை மன்னித்து விட்டான். அல்லாஹ் நம்பிக்கையாளர்கள் மீது அருள்பாலிப்பவனாவான்.” (03:152)

முஸ்லிம்களின் வரலாற்றில் மிகக் கடினமான இந்த காலத்தில் அவர்களுடைய நிலைகளை சிந்திப்பார்களாயின் அவர்கள் உலகத்தின் மீது ஆசை கொண்டவர்களாகவும் எண்ணங்கள் பிரிந்தவர்களாகவும் தங்களுடைய உள்ளார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துவதை விட்டும் நீங்கியவர்களாகவும் இருப்பதே அவர்கள் இந்த அளவு இழிவை சந்தித்திருப்பதற்கான ஒரே காரணம் என்பதை அறிந்து கொள்வார்கள். நிச்சயமாக அதுவே சோதனைகளுக்கான பிரதான காரணமாகும்.

மூஸா (அலை) அவர்களுடைய சமூகத்திலே சாமிரீ என்பவன் அவனுடைய கூட்டத்திற்காக தங்கத்திலான ஒரு காளைக் கன்றை செய்து, இதுதான் உங்களுடையவும் மூஸாவுடையவும் இரட்சகன் என்று அவர்களுக்கு சொன்ன போது ஹாரூன் (அலை) அவர்கள் சிலைகளை வணங்குவதை விடவும் பிரிவினைகள் என்பது மிகவும் ஆபத்தானது. கடும் தீங்கை விளைவிக்க கூடியது என்று கருதினார்கள்[1]. இதனால், அவர்கள் மௌனமாக

[1] ஹாறூன் (அலை) அவர்களை அவரது சமூகம் கொலை செய்ய எத்தனிக்கும் அளவுக்கு அந்த இணைவைப்பை விட்டும் அவர்களைத் தடுப்பதற்காக உழைத்தார்கள் தன்னால் முடியாது என்ற நிலை உருவான போது அதை வெறுத்து தன் சகோதரன் மூஸா (அலை) அவர்கள் வரும்வரை அவர்களை விட்டும் ஒதுங்கியிருந்தார்கள். அல்லா□ இதை அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

இருந்தார்கள். தன்னுடைய சகோதரர் மூஸா (அலை) அவர்கள் வரும்வரை காத்திருந்தார்கள். மூஸா (அலை) அவர்கள் வந்தபோது அவர்களுடைய சமூகம் காளைக் கன்றை வணங்குவதைக் கண்டார்கள். இதனால் தன்னுடைய சகோதரர் ஹாரூனை கடுமையாக பழிக்கலானார்கள்.

ஹாரூன் (அலை) அவர்கள் தன்னுடைய சகோதரரான மூஸாவிற்கு சொல்வதற்கு அல்லாஹ்வின் பின்வரும் வசனத்தில் சொல்லக்கூடிய காரணத்தை தவிர வேறு எந்த காரணமும் அவருக்கு இருக்கவில்லை. "அதற்கவர் எனது தாயின் மகனே! எனது தாடியையோ தலை முடியையோ பிடித்து இழுக்காதீர். இஸ்ராயீலின் சந்ததிகளுக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணி விட்டீர். எனது சொல்லை நீர் கவனிக்கவுமில்லை என்று நீர் கூறி விடுவீர் என நிச்சயமாக நான் பயந்தேன் எனக் கூறினார்."

எனவே, அவர்களுக்கிடையில் பிரிவினைகள் பிளவுகள் ஏற்பட்டு விடும் என்ற பயமே அவர்களை கடுமையாக எதிர்க்காததற்குரிய காரணமாக இருந்தது. மேலும் ஹாரூன் (அலை) அவர்கள் அவருடைய சமூகத்திற்கு எதிராக கடுமையான பிரச்சாரத்தை செய்யாததற்குரிய காரணமாகவும் அவருடைய கண்டிப்பு எந்த பயனையும் அவர்களுக்கு அளிக்கவில்லை என்று கண்டபோது அவர்களை விட்டும் அவர் ஒதுங்கியதற்குமான காரணமாக இருந்தது.

முரண்பாடு, பிரிவினை என்பவற்றை எச்சரிக்கின்ற இழிவுபடுத்துகின்ற அணிகளை ஒற்றுமைப்படுத்திக் கொள்ளுமாறு அழைக்கின்ற உதிரிகளாக கிடப்பதை தவிர்ந்து கொள்ளுமாறு வலியுறுத்துகின்ற அதிகமான அல்குர்ஆன் வசனங்களில் ஒரு சிலதே மேலே குறிப்பிடப்பட்டவையாகும். மேலும் பிரிவினையால் ஏற்படுகின்ற விபரீதங்களை விட்டும் இஸ்லாமிய சமூகத்தை

பாதுகாக்குமாறு ஏவுகின்ற அதிகமான வசனங்களில் ஒரு சிலவற்றையே மேலே குறிப்பிட்டுள்ளேன்.

இமாம் அஸ்ஸுபுகி (ரஹ்) அவர்கள் “அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ள முரண்பாடுகள், பிரிவினைகள் என்பது அடிப்படையில் ஏற்படுகின்ற பிரிவினைகளாகும். அது பித்அத், வழிகேடுகள் என்பவற்றைக் குறிக்கிறது” என்று சொல்கிறார்கள்.
அது போன்றே இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் முரண்பாட்டின் எந்த வடிவத்தையும் சமூகத்திற்கு அருளாக கருதவில்லை. மாறாக அவை அனைத்தையும் சமூகத்திற்கு இறங்கிய தண்டனையாகவே கருதினார்கள்.

தனிமைப்படுதல், பிளவுபடுதல் என்பவற்றினுடைய விபரீதங்களை விட்டும் கடுமையாக எச்சரிக்கின்றவராக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். அவர் ஊரில் இருந்த போதும் பிரயாணத்தில் இருந்த போதும் ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் இருக்குமாறு ஏவக்கூடியவராக இருந்தார். ஒற்றுமையை வலியுறுத்துகின்ற பிரிவினை, பிளவுகளை தடை செய்கின்ற ஹதீஸ்கள் அதிகமாக உள்ளது. அவற்றில் சில பின்வருமாறு...

இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக பின்வருமாறு அறிவிக்கிறார்கள்: “உங்களுக்கு எந்த விடயத்தை நான் விட்டேனோ அதில் என்னை விட்டு விடுங்கள். நிச்சயமாக உங்களுக்கு முன்பிருந்தவர்கள் அழிந்ததெல்லாம் அதிகமாக கேள்விகள் கேட்டதும் அவர்களுடைய நபிமார்களிடத்தில் அவர்கள் முரண்பட்டதினாலுமாகும்.” (முஸ்லிம், நஸஈ, இப்னு மாஜா) பிரயாணத்தின் போது பிரயாண கூட்டம் ஓய்வெடுக்கின்ற வேளை ஒற்றுமை இல்லாதவர்களைப் போன்று சிலர் சிலரை விட்டுப் பிரிந்து அங்கும் இங்குமாக ஓய்வெடுத்தபோது நபி (ஸல்) அவர்கள் அதை வெறுத்தார்கள், தடை செய்தார்கள்.

அபூ த.்.லபா (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: “மனிதர்கள் ஓர் இடத்தில் ஓய்வெடுப்பதற்காக இறங்கிய போது மலை குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் பிரிந்து கிடந்தனர். அதை பார்த்த நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக உங்களுடைய இந்த பிரிவு ஷைத்தானினால் ஏற்பட்டதாகும். என்று கூறினார்கள். அதன் பின்பு ஸஹாபாக்கள் எங்கு ஓய்வெடுப்பதற்காக இறங்கினாலும் அவர்கள் சிலர் சிலருடன் சேர்ந்தே இருந்தார்கள்.

ஒரு வெள்ளை ஆடை அவர்களுக்கு மேலால் விரிக்கப்பட்டால் அவர்கள் அனைவரையும் அது சூழ்ந்து கொள்ளும் என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு ஒருவரோடொருவர் சேர்ந்தவர்களாக இருந்தனர். அது அணியின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கும் ஒருவருக்கொருவர் பாசத்தை பரிமாறிக் கொள்வதற்கும் உணர்வுகள் பிரிந்து விடாமல் ஒருவருடைய உணர்வுடன் அடுத்தவரின் உணர்வுகள் கலந்ததின் விளைவாக ஏற்பட்டதாகும்.

நிச்சயமாக சத்தியம் மனிதர்களை ஒன்று சேர்க்கவில்லையாயின்; அசத்தியம் அவர்களை பல கூறுகளாக பிரித்து விடும். அல்லாஹ்வை வணங்குவது அவர்களை ஒற்றுமைப்படுத்; தவில்லையாயின் ஷைத்தானை வணங்குவது அவர்களைப்; பிரித்து விடும். மறுமையினுடைய இன்பங்களை அவர்கள்; ஆதரவு வைக்கவில்லையாயின் உலகத்தில் இன்பங்களிலே ஒருவருக் கொருவர் கருத்து முரண்பாடு கொண்டு பிளவு பட்டு விடுவார்கள். இதுதான் ஜாஹிலிய காலத்தினுடைய விசேட தன்மைகளின் கசப்பான உண்மையாகும். அநியாயங்கள்; நிறைந்த ஜாஹிலிய காலத்தின் விசேட தன்மைகளில் இருந்தும்; உள்ள மிக கசப்பான ஒரு விடயமாகவும் அது இருந்தது. மேலும் அது ஈமான் இல்லாதவர்களுடைய செயலுமாகும்.

எனக்குப் பின்னர் உங்களில் சிலர் சிலருடைய கழுத்துக்களை வெட்டிக் கொண்டு நிராகரிப்பாளர்களாக ஆகிவிடாதீர்கள் என நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

அதாவது, இரத்தக் களரிகளை ஏற்படுத்துகின்ற இந்த சண்டைகள் என்பது தங்களுக்கு மத்தியிலே கருத்து முரண்பாடு கொண்டு பல குழுக்களாக பிரிந்து கிடக்கின்ற இறைநிராகரிப்; பாளர்களின் செயலாகும். நிச்சயமாக இஸ்லாம் தன்னுடைய சமூகத்தை பாதுகாப்பதில் மிகவும் கவனம் செலுத்துகின்றது.

அவர்களுடைய பலத்தை பாதுகாப்பதற்கு முயற்சிக்கின்றது. இதனால்தான் தன்னுடைய பலத்தைக் கொண்டு பிரிவினையை ஏற்படுத்துகின்ற, பிளவுகளை உருவாக்குபவற்றைத் தடுக்கின்றது. மேலும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பிளவுகளை விட்டும் சமூகத்தை பாதுகாக்குமாறும் ஒருவருக்கொருவர் உதவி செய்து, ஒற்றுமையாக தோழமையுடன் நடந்து கொள்ளுமாறும் ஏவுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: அல்லாஹ்வுடைய கரம் ஒற்றுமையில் (கூட்டமைப்பில்) இருக்கின்றது.

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கக் கூடிய தபரானி, ஹாகிம், திர்மிதி போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு செய்தியில்: நிச்சயமாக நபி (ஸல்)அவர்கள் சொன்னார்கள் “அல்லாஹ் இந்த சமூகத்தை அல்லது என்னுடைய சமூகத்தை வழிகேட்டின் மீது ஒன்று சேர்க்க மாட்டான். அதனால் பெரும் கூட்டத்தை நீங்கள் பின்பற்றுங்கள். யார் பிளவுபட்டு தனித்து சென்றானோ அவன் நரகத்திலே தனித்து விடப்படுவான்.”

நிச்சயமாக தற்போது ஏற்பட்டுள்ள அதிகமான பிரிவினைகளை நாம் சிந்தித்தால் உலக நோக்கங்களும், கண்மூடித்தனமான தாக்குதல்களுமே இதற்கு பின்னால் உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். ஒற்றுமை என்பது பலம். பிளவு என்பது பலவீனம் மேலும் சமூகத்தை அழித்துவிடும் ஒன்றாகும். பலமான சமூகத்தை பலவீனப்படுத்தும். மெல்லிய பலவீனமான நூற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உறுதியான பலமான கயிறாக மாறி பெரும் சுமைகளை இழுக்கின்றது.

அபூ மூஸா அல்அ‘அரி (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு செய்தியில் நபி (ஸல்) அவர்கள் ஒரு மு.்.மின் அடுத்த மு.்.மினுக்கு ஒரு கட்டிடத்தை போன்றவனவான். அதில் சிலது

சிலதுடன் சேர்ந்து பலப்படுத்துகிறது. என்று கூறி தன்னுடைய கை விரல்களுக்கிடையில் இணைத்துக் காட்டினார்கள்.

இவ்வாறுதான் நபி (ஸல்) அவர்கள் மு.ஃ.மின்களுக்கிடையில் நேசத்தை பலப்படுத்துகின்ற ஒவ்வொன்றையும், அவர்களுக்கு பயன் தரக்கூடியவற்றில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வழி செய்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் தூண்டினார்கள். மேலும் அவர்களுக்கு மத்தியில் குரோதத்தையும் பிளவுகளையும் பிரிவுகளையும் ஏற்படுத்துபவற்றை தடை செய்தார்கள். இது தொடர்பில் அதிகமான குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் வந்துள்ளன. இதனால், மார்க்கத்தில் கவனிக்கப்பட வேண்டிய, அடுத்தவற்றை விட கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய, இயலுமான அளவு முயற்சிக்க வேண்டிய, அடிப்படையான விடயங்களில் மிகப் பெரும் விடயமாக இது கணிக்கப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் மு.ஃ.மின்களுடைய ஒற்றுமையை ஓர் உடம்பின் உறுப்புகளுக்கு ஒப்பிட்டுள்ளார்கள். மேலும் அல்லாஹ்வை நிராகரிப்பதற்கு பிறகு, சாதாரணமாக விடயங்களிலாயினும் பிளவு படுதல் பிரிதல் என்பதை தவிர அவருக்கு மிகவும் கோபத்திற்குரிய விடயமாக வேறு எதுவும் இருக்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள் சொன்னதை கேட்டதாக நு.ஃ.மான் இப்னு பஷீர் (ரழி) அறிவிக்கக்கூடிய ஒரு செய்தியில்: “மு.ஃ.மின்கள் அவர்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் இரக்கம் கொள்வதிலும் பாசம் கொள்வதிலும் அன்பு கொள்வதிலும் ஓர் உடம்பைப் போன்றவர்கள். அதன் ஓர் உறுப்பு நோய்வாய்ப்பட்டால் ஏனைய உறுப்புக்கள் சூட்டை கொண்டும் கண் விழித்திருப்பதைக் கொண்டும் அந்த உறுப்பை சீர் செய்வதற்காக நிவாரணம் தேடுகின்றன.”

நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல், ஒருவரை ஒருவர் பாதுகாத்தல், ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாதல், உடன்பாடான சிந்தனை, ஒன்றுபட்ட விளக்கம், கடமைகளை நிறைவேற்றுதல், ஒருவருக்கொருவர் பாசம் கொள்ளுதல் என்ற அடிப்படையில் மு.்.மின்களில் சிலர் சிலரை அதிகமாக நேசித்தல், அல்லாஹ்வுக்கு அடிபணிதல், அவனுடைய கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல் எனும் விடயங்களினால் உருவான ஐக்கியத்தின் அடிப்படையிலேயே இது சாத்தியமாகும்.

இது தொடர்பில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: “நம்பிக்கையாளர்களான ஆண்களும் பெண்களும் அவர்களில் சிலர் மற்றும் சிலருக்கு உதவியாளர்களாவர். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமையை விட்டும் தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவான். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன். ஞானமிக்கவன்.” (09:71)

ஒற்றுமை, உதவி செய்தல், கருத்து முரண்பாட்டை வெறுத்தல் தொடர்பில் உலமாக்களின் சில கூற்றுகள்...

முரண்பாட்டை தடுக்கின்ற, எச்சரிக்கின்ற உலமாக்களின் கூற்றுக்கள் கணக்கிட முடியாத அளவு அதிகமாக வந்துள்ளன. அதில், இங்கு குறிப்பிடுவதற்கு அல்லாஹ் இலகுபடுத்திய சில விடயங்களை மட்டும் தருகின்றேன்.

1. உபை இப்னு கஃப் (ரழி) அவர்களும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களும்: ஒருவர் ஓர் ஆடையில் தொழுவது பற்றி கருத்து முரண்பாடு கொண்ட போது உமர் (ரழி) அவர்கள் கோபமடைந்தார்கள். உபை இப்னு கஃப் (ரழி) அவர்கள் “ஒரு மனிதன் ஓர் ஆடையுடன் தொழுவது சிறந்தது” என்றார்கள். அதற்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் “ஆடைகள் குறைவாக இருந்தபோதுதான் அவ்வாறு இருந்தது” என்று சொன்னார்கள்.

உமர் (ரழி) அவர்கள் கோபமடைந்தவர்களாக வெளியில் வந்தார்கள். நபி (ஸல்) அவர்களுடைய தோழர்களில் யாருடைய கருத்துக்கள் கவனிக்கப்படுகிறதோ அத்தகைய இரண்டு மனிதர்கள் கருத்து முரண்பாடு கொண்டார்கள் நிச்சயமாக உபை இப்னு கஃப் (ரழி) அவர்கள் உண்மையுரைத்தார். இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அதைச் செய்யவில்லை. ஆனாலும், இதன் பின்பு என்னிடத்தில் இவ்வாறு யாராவது முரண்படுவதை கண்டால் அவருக்கு இவ்வாறு இவ்வாறு நான் செய்வேன் என்று உமர் (ரழி) அவர்கள்

சொன்னார்கள். அதாவது அவரை தண்டிப்பேன் என்று குறிப்பிட்டார்கள்.

2. ஸஹாபாக்களில் சிலர் ஜனாஸா தொழுகையின் போது ஐந்து தக்பீர்களையும் சிலர் ஏழு தக்பீர்களையும் சிலர் நான்கு தக்பீர்களையும் சொன்னார்கள். அப்போது நேர்வழி பெற்ற கலீபாவான உமர் (ரழி) அவர்கள்: அவர்கள் அனைவரையும் நான்கு தக்பீர்களில் ஒன்று சேர்த்தார்கள். அது அல்லாது அதற்கு அதிகமாக அல்லது அதைவிட குறைவாக சொல்லப்படுவதை தடை செய்தார்கள். இது எல்லோரும் ஏகோபித்த முரண்படக் கூடாத ஒரு இஜ்மாவாக மாறிவிட்டது.

3. இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள், உஸ்மான் (ரழி) அவர்கள் ஹஜ்ஜில் லுஹரை நான்கு ரக்அத்துக்களாக தொழுத போது வெறுத்தார்கள். என்றாலும், அவருக்கு அவர் முரண்படவில்லை. முரண்பாடு தீங்கு விழைவிக்கும். பிரிவினை ஆபத்தானது என்று கூறினார்கள்.

4. அனைவரும் அபூபக்கர் (ரழி) அவர்களுடைய காலத்திலே தொகுக்கப்பட்ட குர்ஆனில் ஒன்று சேர்ந்தார்கள். பிறகு உஸ்மான் (ரழி) அவர்களால் பிரதி செய்யப்பட்ட குர்ஆனிலே ஒன்று சேர்ந்தனர்.

இமாம் பைஹகி (ரஹ்) அவர்கள் ஷுஹ்ரி (ரஹ்) அவர்கள் சொன்னதாக அறிவிக்கும் அறிவிக்கும் ஒரு செய்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றது: “ஸஹாபாக்கள் நிறைந்திருந்த காலப் பகுதியிலே பிரச்சினை ஏற்பட்டது. அந்த பிரச்சனையின் போது நிகழ்ந்த உயிர் பலிகள், சொத்து சேதங்கள் குர்ஆனுடைய விளக்கத்தின்

மூலம் ஏற்பட்ட இதர பாதிப்புகள் அனைத்தையும் வழிகேடாகவே அவர்கள் கருதினார்கள். அவையனைத்தும் ஜாஹிலிய்யக்கால செயற்பாடுகள் என்பதில் அவர்கள் கருத்தொற்றுமைபட்டார்கள்''

மேலே, நாம் குறிப்பிட்ட சில ஹதீஸ்கள் மற்றும் உலமாக்களினுடைய சில கூற்றுக்களில் இருந்து பின்வரும் விடயத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும். நிச்சயமாக இந்த சமூகத்தினுடைய நிலைபேரான தன்மை என்பது அல்லாஹ்வின் மீது கொண்ட நேசத்தால் ஏற்பட்ட உள்ளங்களின் பிணைப்பில் உள்ளது என்பதையும் இந்த சமூகத்தின் அழிவு உள்ளங்கள் பிளவுபடுவதில் தங்கி உள்ளது என்பதையும் நபி (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள்.

மேலும் சங்கைமிக்க ஸஹாபாக்கள் பிளவுகள் என்பது நலவை கொண்டு வராது என்பதை அறிந்திருந்தார்கள். முடியுமான அளவு கருத்து முரண்பாடு கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சித்தார்கள். அவர்கள் முரண்பாடுகளையும், கிளைப் பிரச்சினைகளையும் அதிகரிப்பவர்களாக இருக்கவில்லை. மாறாக புதிதாக ஏற்படும் பிரச்சனைகளை நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலின் கீழ் நின்று அணுகுபவர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர் சிலரை ஏற்றுக் கொண்டனர். அவர்களில் சிலர் சிலர் மீது அடந்தேறவில்லை. அவர்கள் எல்லை மீறவுமில்லை எல்லை மீறப்படவுமில்லை.

ஒற்றுமையாக இருப்பதில், கடுமையாக அவர்கள் முயற்சித்த போதும் சிலபோது முரண்பாடுகள் தோன்றினால் குர்ஆனின் பாலும் ஹதீஸின்பாலும் விரைந்தார்கள். உடனடியாக அவர்களுக்கு மத்தியில் இருந்த முரண்பாடுகள் இல்லாமல் போனது. அவர்களுடைய முரண்பாடுகள் கருத்து வேறுபாடுகள் நீங்கவில்லை

என்றாலும் இந்த கருத்து வேறுபாடுகள் அவர்களுக்கு மத்தியில் பிளவுகளையோ பிரிவினைகளையோ உருவாக்கவில்லை. அவர்களை பின்பற்றுகின்றவர்களை அடுத்தவர்களை பின்பற்றுகின்றவர்களுக்கு எதிராக தூண்டவில்லை. மாறாக கருத்து முரண்பாடுகளை அவர்களுடைய நலவுகளில் ஒன்றாகவே கருதினார்கள். ஏனெனில் அவர்களில் ஒவ்வொருவரும் சத்தியத்தையே தேடினர். அவர்களிடம் மேலதிகமான விடயங்கள், அறிவு வரும் வரை தாங்கள் அறிந்தவற்றை நடைமுறைப்படுத்தினர்.

உஸ்மான் (ரழி) அவர்களுக்கு பின்னால் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் ளுஹரை ஹஜ்ஜில் நான்கு ரக்அத்துக்களாக தொழுத சம்பவத்தில் இந்த பண்பு தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் ஸஹாபாக்களில் சிலர் பெரு நாள் தொழுகையில் தொழுகைக்கு முன்னர் குத்பாவை முற்படுத்துகின்ற உமைய கலீபாக்களுக்கு பின்னால் தொழுதுள்ளார்கள். இவர்களுடைய இந்த செயல் அவர்களுக்கு மத்தியிலே பிளவுகளையும் பிரிவுகளையும் ஏற்படுத்தவில்லை. பிரச்சனைகளை அவர்களுக்கு மத்தியில் உருவாக்கவில்லை. அல்லாஹ் போதுமானவன்.

கருத்து முரண்பாடுகள் தொடர்பாக ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறும் போது பின்வருமாறு சொல்கிறார்கள்: “கருத்து முரண்பாடுகளில் சிலது ஒருவருக் கொருவர் வேறுபட்ட இஜ்திஹாதான முடிவுகளை சார்ந்தது. அவற்றை அல்லாஹ்வும் அவனது தூதரும் அங்கீகரித்துள்ளனர்.

உதாரணமாக, பனூ குரைழாவுடைய தினத்தில் ஸஹாபாக்களில் சிலர் அஸர் தொழுகையை பிற்படுத்தி தொழுதார்கள். சிலர்

அதனுடைய நேரத்தில் தொழுதார்கள். இந்த இரண்டு சாராரையும் நபி (ஸல்) அவர்கள் கண்டிக்கவில்லை. மேலும் ஸஹாபாக்களில் சிலர் பனூ குறைழாக்களினுடைய ஈத்த மரங்களை துண்டித்தனர். மற்றும் சிலர் துண்டிக்கவில்லை. அல்லாஹ் இரண்டையும் ஏற்றுக் கொண்டான். தாவூத் (அலை), சுலைமான் (அலை) அவர்கள் பற்றி அல்லாஹ் கூறுவதை போல அவர்கள் இருவரும் விளைச்சலிலே தீர்ப்பளித்தனர். ஆனால், அரசாங்கம் ஒருவருடைய தீர்ப்பையே ஏற்றுக் கொண்டது. அல்லாஹ் அவ்விருவரில் ஒவ்வொருவரையும் அறிவாளிகள் என்றும் அவர்கள் அதைக் கொண்டு தீர்ப்பு வழங்கியதற்காகவும் புகழ்ந்தான்.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒரு ஆட்சியாளர் (தீர்ப்பளிப்பவர்) இஜ்திஹாத் செய்து சரியான முடிவை பெற்றுக் கொண்டால் இரண்டு கூலிகளை பெறுவார். அவர் இஜ்திஹாத் செய்து தவறிழைத்தால் அவருக்கு ஒரு கூலி உண்டு."

எனவே, அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எதை விசாலப்படுத்தினார்களோ அது விசாலப்படுத்தப்பட்டதுதான். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எதை மன்னித்தார்களோ அது மன்னிக்கப் பட்டதுதான். எனவே, முஸ்லிம்கள் அனைவரும் மடமை என்று கருத்தொற்றுமைப்பட்டதும், தடை என்று கருத்தொற்றுமைப்பட்டதும் அல்லது விரும்பத்தக்கது, ஆகுமானது என்று கருத்தொற்றுமைப் பட்டதும், அவர்களில் சிலர் இழைத்த தவறை விட்டும் சிலர் மன்னித்ததும் அவர்கள் செய்த இஜ்திஹாதில் சிலர் சிலரை ஏற்றுக் கொண்டதும் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏவிய விடயங்களில் இருந்தும் உள்ளதாகும். நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒற்றுமையாக இருப்பதை ஏவி இருக்கிறார்கள். பிரிவினையை தடுத்துள்ளார்கள். அது வழிகேட்டில் இந்த சமூகம் ஒன்றினையாது என்பதை அறிவிக்கின்றது.

விவாதங்கள் மற்றும் கருத்து பரிமாற்றங்களின் போது உணர்வுகள், விளக்கங்கள் வித்தியாசப்படுவது இயல்பானது அதை தவிர்க்க முடியாது.

மார்க்க விடயங்களாயினும் உலகியல் விடயங்களாயினும், பெரிய விடயமாக இருந்தாலும் சிறிய விடயமாக இருந்தாலும் மனிதர்களுடைய கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று முரண்படுகின்ற அடிப்படையிலேயே அல்லாஹ் வைத்துள்ளான். இது அவனுடைய ஹிக்மத்தை சார்ந்த விடயமாகும். இதற்கான பிரதானமான காரணம் மனிதர்கள் அறிவிலும் விளக்கத்திலும் வெவ்வேறான படித்தரங்களில் படைக்கப்பட்டிருப்பதாகும்.

அல்லாஹ் சுலைமான் (அலை), தாவூத் (அலை) அவர்களைப் பற்றி சொல்கிறான்: “அதை நாம் சுலைமானுக்கு தெளிவுபடுத்தினோம். அவர்கள் இருவரில் ஒவ்வொருவருக்கும் நாம் அறிவையும் விளக்கத்தையும் கொடுத்தோம்” (21:79)

எனவே, அவர்கள் இருவருடைய தீர்ப்புகளும் அவர்கள் இருவருடைய விளக்கத்தின் வித்தியாசத்திற்கு ஏற்ப வித்தியாசப்பட்டது. அதுபோன்று அவர்களுடைய மனோநிலைகளும், அவர்களுடைய விருப்பங்களும், அவர்களுடைய கருத்துக்களும் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்ற அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளார்கள். அது போன்று பலம், பலவீனம், அறிவில் பொறுமையாக இருத்தல், அமல் செய்வதில் பொறுமையாக இருத்தல் என்பவற்றில் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்களாகவே

படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, விளக்கங்கள் வேறுபடுவது கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாவது மனித வாழ்க்கையில் அபூர்வமான ஒரு விடயமல்ல. அவை உள்ளங்கள் முரண்படு வதின்பால் இட்டுச் செல்லக்கூடாது. ஏனெனில், உள்ளங்கள் முரண்படுவது ஹராமாகும். அது ஈமானுக்கு அச்சுருத்தல் விடுக்கின்ற பாரதூரமான ஒரு விடயமாகும். நபி (ஸல்)அவர்கள் சொல்கிறார்கள்: “நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சுவனம் நுழைய மாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் நேசம் கொள்ளாத வரை ஈமான் கொள்ள மாட்டீர்கள்.”

ஒரு முஸ்லிமை பொறுத்தவரை சத்தியத்தை தேடுபவனாகவும் யதார்த்தங்களை ஆய்வு செய்பவான், சரியானதை பாராட்டுவான் தவறானதிலிருந்து விரண்டோடுவான். நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: “யாருடைய உள்ளத்தில் கடுகளவேனும் பெருமை இருக்கின்றதோ அவன் சுவனம் நுழையமாட்டான். அப்போது ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரே நிச்சயமாக ஒரு மனிதர் தன்னுடைய ஆடை அழகாக இருக்க வேண்டும் தன்னுடைய செருப்பு அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரே என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள்: நிச்சயமாக அல்லாஹ் அழகானவன் அவன் அழகையே விரும்புகிறான் பெருமை என்பது சத்தியத்தை மறைப்பதும் அடுத்தவர்களை இழிவாக கருதுவதுமாகும்.” என்று கூறினார்கள்.

நிச்சயமாக சத்தியத்தை நிராகரிப்பதும், அதை ஏற்றுக் கொள்ளாமல் விடுவதும், அதை மறைப்பதும், மறைப்பதற்கு முயற்சிப்பதும், யூத கிறிஸ்தவர்களின் பண்பாகும். மேலும் ஒரு மனிதன் மறுமை நாளில் சென்றடைய இருக்கின்ற இடம் தொடர்பில் அச்சுறுத்துகின்ற ஆபத்தான ஒரு காரியமாகும்.

விளக்கங்களும் சிந்தனைகளும் கருத்துக்களும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்ற போது வேறுபட்டு, மறைவான மனோ இச்சையின் போட்டி தன்மையை தூண்டுகின்ற அடிப்படையிலே செயல்படுகின்ற வேறு காரணிகளும் கருத்து முரண்பாடுகளோடு ஒன்று சேருகின்ற போது சத்தியத்தை தேடுகின்ற ஆய்வு என்பது எந்த வகையிலும் அறிவோடு தொடர்பில்லாத பிடிவாதத்தின்பால் இட்டுச் செல்கின்றது.

உண்மையைத் தேடுதல் என்ற எண்ணத்தை விட்டு வெற்றி கொள்ளல், பொறாமை, பெயர், புகழ் தலைமைத்துவம் என்பவற்றை நோக்கியதாக எண்ணங்கள் அமைந்துவிடுமாக இருந்தால் அது கருத்து முரண்பாடுகளில் பிளவுகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கும். இதனாலேயே வரலாற்றில் பல துக்ககரமான சம்பவங்கள், அழுக்கு நிறைந்த விடயங்கள் நிகழ்ந்துள்ளன. இதனால்தான் எமது முன்னோர்களான ஸலபுஸ்ஸாலிஹீன்கள் கலந்துரையாடல்கள், கருத்துப்பறிமாற்றங்களின் போது எண்ணத்தை தூய்மையானதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று அதிகமாக எழுதியுள்ளார்கள்.

கஸ்ஸாலி அவர்கள் தன்னுடைய யஹ்யாவில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: ‘‘மார்க்கத்தில் சத்தியத்தை தெரிந்து கொள்வதற்கு உதவுவது, சிந்திப்பதற்கு உதவுவதும், உணர்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதற்கு உதவுவதும், பயனளிக்கக் கூடியதும் தாக்கம் நிறைந்ததுமாகும். என்றாலும், அதற்கென்று சில அடையாளங்களும் நிபந்தனைகளும் இருக்கின்றன. அதிலொன்று சத்தியத்தை தேடுகின்றவர் கைதவறிய பொருளை தேடுகின்றவர் போன்று இருக்க வேண்டும். அந்தப் பொருள் அவருடைய கையில் கிடைக்கலாம் அல்லது அவருக்கு உதவுகின்றவரின் கையில் கிடைக்கலாம். அவருக்கு உதவுகின்ற அவரின்

தோழனின் கையில் அது கிடைத்தால் அந்த தோழனை தனக்கு உதவுபவராக கருத வேண்டுமே தவிர தனது எதிரியாக கருதக் கூடாது. அவருடைய தவறை அவருக்கு அவன் தெளிவுபடுத்தினால் அவனுக்கு அவர் நன்றி செலுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

இவ்வாறுதான் ஸஹாபாக்களுடைய கருத்துப்பறிமாற்றங்கள் இருந்தன. இஸ்லாமிய நாகரீகம் பூத்துக் குலுங்கிய அந்தக் காலத்தில் கருத்து வேறுபாடுகள், இஜ்திஹாதுக்குரிய விடயங்களில் கருத்து வேறுபாடு கொள்வது அவர்களுக்கு மத்தியிலே பிரிவினையை ஏற்படுத்துவதாக இருக்கவில்லை. அவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஸகாத்தில் கொடுக்க வேண்டிய பங்கு தொடர்பில் இஜ்திஹாத் செய்தார்கள். போராட்டக் களத்திலே கனீமத்தாக கிடைத்த பொருட்களை பங்கிடுவதிலே இஜ்திஹாத் செய்தார்கள்.

பசியின் போதும் போராட்டங்களிலும் திருடியவன் மீது தண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என்பதிலே இஜ்திஹாத் செய்தார்கள். ஒருவரை கொலை செய்ததற்காக ஒரு கூட்டத்தை கொலை செய்யக்கூடாது என்று அவர்கள் கருதினார்கள். அதே போன்று விலையை தீர்மானிக்கின்ற விடயத்திலே தாபியீன்கள் இஜ்திஹாத் செய்தார்கள். மேலும் பனூ ஹாஷிம் கிளையினருக்கு ஸகாத்தை கொடுக்கின்ற விடயத்திலும் இஜ்திஹாத் செய்தார்கள். அவர்களில் எவரும் தனக்கு முரண்பட்டவரை வெறுக்கவில்லை. மாறாக ஒரு பெண்மணி உமர் (ரழி) அவர்களின் கருத்தை மறுத்துரைத்தாள். சத்தியத்தை அவருக்கு தெளிவுபடுத்தினாள். அதுவும் மனிதர்களுக்கு மத்தியிலே அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் நேரம் குத்பாவிலேயே அது நடந்தது. அப்போது உமர் (ரழி)

அவர்கள்: ஒரு பெண் சரியாகச் சொன்னாள் உமர் தவறிழைத்து விட்டார் என்று சொன்னார்கள்.

அலி (ரழி) அவர்களிடம் ஒரு மனிதர் கேள்வி கேட்டார், அவருக்கு அலி (ரழி) அவர்கள் பதில் அளித்தார்கள். அப்போது அந்த நபர் அமீருல் மு.ஃமினீனே அது அவ்வாறு அல்ல என்று சொன்னார். இப்படி இப்படித்தான் என்றார். அதற்கு அலி (ரழி) அவர்கள் நீ சரியாகச் சொன்னாய் நான் தவறிழைத்து விட்டேன். ஒவ்வொரு அறிவாளிக்கும் மேல் மிக அறிந்தவன் ஒருவன் இருக்கிறான். என்று சொன்னார்கள்.

நிச்சயமாக விளக்கத்தில், சிந்தனைகள் முரண்படுகின்ற விடயத்தை இஸ்லாம் இலகுபடுத்தியுள்ளது. அதில் தவறிழைப் பவனுக்கும் ஒரு கூலியை வழங்கியுள்ளது. சரியாக சொல்பவருக்கு இரண்டு கூலியை வழங்கியுள்ளது. அதனால், தகுதியுள்ள அனைவரும் முயற்சியை செய்வதற்கு இஸ்லாம் அனுமதித்துள்ளது. ஆனாலும், அவர்கள் உண்மையை தேடுகின்ற விடயத்தில் கலப்பற்றவர்களாக இருக்க வேண்டும். அதை அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்களாக இருக்க வேண்டும். அதை அறிந்து கொள்வதற்காக அவர்கள் தங்களால் முடியுமானவற்றை பிரயோகித்ததன் பின்பு அதைக் கொண்டு அவர்கள் அமல் செய்ய வேண்டும்.

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தன்னுடைய ஸஹீஹில் அறிவிக்கும் ஒரு செய்தியிலே நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: “தீர்ப்பளிக்கும் ஒருவர் இஜ்திஹாத் செய்து சரியான தீர்ப்பை வழங்கினால் அவருக்கு இரண்டு கூலிகள் உள்ளன. அவர் முயற்சித்து தவறிழைத்து விட்டால் அவருக்கு

ஒரு கூலி இருக்கிறது.'' எனவே, நிச்சயமாக அல்லாஹ்வுடைய அருள் என்பது சிந்தனையினுடைய முடிவுகளோடு தொடர்புபட்டது கிடையாது. ஆனாலும் உள்ளத்தினுடைய நோக்கத்தின் நேர்த்தியுடன் தொடர்புபடுகின்றது என்பதே இங்கு தெளிவாகின்றது.

எனவே, அல்லாஹ் தன்னுடைய மார்க்கத்தில் விரிவுபடுத்திய விடயங்களை நாங்கள் ஏன் ஒடுக்கிக் கொள்ள வேண்டும்! ஏன் எங்களுக்கு மத்தியில் இறுக்கத்தையும் கொடூரத்தையும் இந்த விடயங்களில் கடைப்பிடிக்க வேண்டும்! மார்க்கத்தில் இருந்து வெளியேறிவிட்டார்கள் என்றும், ஜமாஅத்தை பிரிந்து விட்டார்கள் என்றும், இஸ்லாமிய அரசுக்கு எதிராக வெளியேறி விட்டார்கள் என்றும் கருத்து ரீதியாக முரண்படுபவர்களை வர்ணிப்பதிலே அவசரப்படுபவர்கள், கருத்து முரண்பாட்டை ஒரு காரணமாக எடுத்துக் கொள்வது மிகவும் கெட்டதாகும். மேலும், கருத்து முரண்பாடுடையவர்கள் மீது அவசரமாக தீர்ப்பு வழங்குகின்றவர்கள் மார்க்கத்தினுடைய சட்ட விதிகளையும், தீர்ப்பு வழங்குவதற்குரிய அடிப்படைகளையும், இஸ்லாமிய அறிஞர்கள் தீர்ப்பு வழங்கும் போது கடைபிடித்த முறைகளையும் கவனிக்காது செயற்படுகின்றனர்.

இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் கருத்து முரண்பாட்டை தடுக்கின்ற, கருத்து முரண்பாட்டை பழிக்கின்ற ஹதீஸ்களையும் குர்ஆன் வசனங்களையும் குறிப்பிட்டதற்கு பிறகு பின்வருமாறு சொல்கிறார்கள்: ''நிச்சயமாக ஸஹாபாக்கள் முரண்பட்டார்கள். அவர்கள் மனிதர்களில் மிகச் சிறந்தவர்கள். அவர்களுக்கும் இந்த இழிவு சேருமா? என்று ஒருவர் கேட்டால் அவருக்கு பின்வருமாறு சொல்லப்படும். இல்லை இந்த விடயங்களில் இருந்து எதுவும் அவர்களுக்கு சேராது. ஏனெனில், அவர்களில்

ஒவ்வொருவரும் அல்லாஹ்வுடைய பாதையை தேடினார்கள். சத்தியத்தை தேடினார்கள். அவர்களில் தவறிழைத்தவர்க்குக் கூட ஒரு கூலி கொடுக்கப்பட்டார்கள். அவர்கள் நலவை நாடுவதிலே மிகவும் அழகான எண்ணத்துடன் இருந்ததின் காரணமாக அது அவர்களுக்கு சாத்தியமானது. அவர்களை விட்டும் அவர்களுடைய தீமைகள் உயர்த்தப்பட்டன. ஏனெனில் அவர்கள் வேண்டுமென்று செய்யவில்லை. அதை அவர்கள் நாடவும் இல்லை. மேலும் சத்தியத்தை தேடுவதில் அவர்கள் பொடுபோக்குடையவர்களாக இருக்கவுமில்லை. அவர்களில் சரியாகச் சொன்னவருக்கு இரண்டு கூலிகள் வழங்கப்பட்டன. மறுமை நாள் வரை மார்க்கத்தில் தெரியாத அல்லது மார்க்கத்தில் மறைந்து இருக்கின்ற விடயங்களில் ஒவ்வொரு முஸ்லிமினுடைய நிலைமையும் இதுதான்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவும், எச்சரிக்கைகளும் யார் அல்லாஹ்வுடைய கயிறாகிய அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களுடைய போதனைகளும் கிடைத்ததற்குப் பின்பும், பின்பற்ற வேண்டிய ஆதாரம் உறுதியான பின்பும், அடுத்தவர்களுடைய கருத்துக்களை எடுத்தாரோ அவர் மார்க்கத்தில் இருந்த அறிவீனம், இறையச்சத்தில் இருந்த பலவீனம் என்பவற்றின் காரணமாக அவருடைய மனோ இச்சைகளுக்கு உடன்படுகின்ற கூற்றுக்களை ஒவ்வொருவருடைய கூற்றிலும் தேடினர். அவர்கள் பின்பற்றுகின்ற ஆலிம்கள் ஒவ்வொருவருடைய கூற்றிலும் சலுகை எதில் இருக்குமோ அதை எடுத்துக் கொள்வார். அல்லாஹ்வைத் தொட்டும் அவனுடைய தூதரை தொட்டும் வந்த ஆதாரம் எந்தைச் சொல்கிறதோ அவற்றை எடுக்கமாட்டார்.

கருத்து முரண்பாடுகள் காரணமாக அல்லாஹ் அல்லாதவரை பின்பற்றுகின்றவனாக, பிடிவாதக் காரனாக, ஜாஹிலியாக்கால

வெறியை கொண்டவனாக, குர்ஆனையும் சுன்னாவையும் நிராகரித்து பிரிவினையை நாடியவனாக யார் இருந்தானோ அவனையே மேற்கூறியவைகள் குறிக்கின்றன. அவன் விரும்புகின்ற பிரிவினையை அந்த ஆதாரங்கள் சொன்னால் அவற்றை அவன் எடுத்துக் கொள்கிறான். அவனுடைய நோக்கத்திற்கு அந்த ஆதாரங்கள் முரண்பட்டால் அவனுடைய அறிவீனத்தை அவன் எடுத்துக் கொள்கிறான். குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களுடைய போதனைகளையும் விட்டு விடுகிறான். இவர்களே விமர்சிக்கப்பட்ட முரண்பாடுடையோராவர்.

கருத்து முரண்பாட்டின் எதார்த்தமும் வகைகளும் அவற்றின் சட்டங்களும்.

இஜ்திஹாத் செய்பவர்கள் தவறிழைக்கும் நேரம் அவர்களுடைய தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவர்களுடைய தவறுக்கு கூலி கிடைக்கிறது என்பது அவர்கள் தூய்மையான எண்ணத்துடன் தங்களால் முடியுமான முயற்சியை செய்திருக்க வேண்டும் என்பதுடன் தொடர்புபடுகின்றது. இவருடைய விடயம் அல்லாஹ்விற்குட்பட்டது. என்றாலும், ஒரு முஸ்லிமின் விடயத்தில் நல்லெண்ணம் கொள்வதே அடிப்படையாகும். அவனுடைய தவறுகளுக்குரிய நியாயங்களைத் தேட வேண்டும்.

அது போன்றே முஜ்தஹித்களுக்கு அவர்கள் விடுகின்ற தவறுகளின் போது கூலி இருக்கின்றது என்பதனால் சத்தியத்தை தெளிவுபடுத்தாமல் மௌனமாக இருப்பது அவசியமில்லை. மாறாக சத்தியத்தை தெளிவுபடுத்துவது அவசியமாகும். இது, இடம், காலத்தை பொறுத்து வித்தியாசப்படுகின்றது. மேலும், சத்தியத்திற்குரிய ஆதாரங்களை தெளிவுபடுத்துவது அவசியமாகும். ஆனால், இவை முரண்படுகின்றவர்களை கடுமையாக சாடுவதன் மூலமோ, அவர்களை மார்க்கத்தை விட்டும் சென்று விட்டவர்களாக சந்தேகிப்பதாகவோ இருக்கக் கூடாது. மாறாக தெளிவான வார்த்தைகளைக் கொண்டு சத்தியத்தை தெளிவுபடுத்த வேண்டும். அதாவது ஒரு விடயத்தின் பன்முகத்தன்மையை எடுத்துச் சொல்லும் போது ஏற்படும் முரண்பாடு அல்லது ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற கருத்து வேறுபாடு. இதுவே, உண்மையான கருத்து முரண்பாடாகும்.

வார்த்தை பிரயோகங்களில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடு என்பது கருத்து முரண்பாடு கொள்கின்ற ஒவ்வொருவரும் அவர் நாடுவதை அடுத்தவருடைய வார்த்தை அல்லாத வேறு வார்த்தைகளைக் கொண்டு சொல்வதாகும். உதாரணமாக “அஸ்ஸிராதல் முஸ்தகீம்” என்ற வசனத்தை விளக்கும் போது சிலர் அல்குர்ஆன் என்று சொல்கின்றனர். இன்னும் சிலர் ஸிராத்துல் முஸ்தகீம் என்பது இஸ்லாத்தைக் குறிக்கின்றது என்று சொல்கின்றனர். இன்னும் சிலர் ஸிராத்துல் முஸ்தகீம் என்பது நபி (ஸல்) அவர்களுடைய வழிமுறையாகிய அவர்கள் கொண்டு வந்த அல்குர்ஆனையும் சுன்னாவையும் முஸ்லிம்களுடைய கூட்டமைப்பையும் அல்லது ஒற்றுமையையும் குறிக்கிறது என்று சொல்கின்றனர். இவை ஒவ்வொன்றும் சரியானதுதான்.

ஒரு விடயத்தின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டும் போது ஏற்படும் முரண்பாடு என்பது கருத்து முரண்பாடு கொள்கின்ற ஒவ்வொருவரும் பொதுவான ஒரு விடயத்தின் சில பகுதிகளை உதாரணம் சொல்வதற்காக அல்லது வாசகருக்கு தான் நாடுகின்ற அல்லது பொதுவாக அந்த விடயத்தின் மூலம் நாடப்படுவதற்கு ஏற்ப சில வகைகளை குறிப்பிடுவதாகும்.

உதாரணமாக, சூரத்துல் பாத்தீர் 32 வது வசனத்தில் அல்லாஹ் “அவர்களில் சிலர் தங்களுடைய ஆத்மாக்களுக்கு அநியாயம் செய்கின்றனர் இன்னும் சிலர் நடுநிலையானவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் நன்மையால் முந்தியவர்களாக இருக்கின்றார்கள்” என்று சொல்கிறான். இதை விளக்கும் போது அறிஞர்களில் சிலர் ‘முந்தியவர்’ என்பதன் விளக்கம் தொழுகையை அதனுடைய ஆரம்ப நேரத்தில் தொழுபவராகும். ‘மத்திமமானவர்’ என்பதன் கருத்து தொழுகையை அதனுடைய நடு நேரத்தில்

தொழுபவராகும். ‘தனக்கு அநியாயம் செய்து கொண்டவர்’ என்பதன் கருத்து அஸர் தொழுகையை சூரியன் மஞ்சளிக்கும் வரை பிற்படுத்துபவராகும் என்று சொல்கின்றனர். மற்றும் சிலர் ‘முந்தியவர்’ என்பது நல்ல முறையில் ஸதகா செய்தவரை குறிக்கிறது. ‘மத்திமமானவர்’ என்பதன் கருத்து வியாபாரம் செய்வதாகும். முறையான அடிப்படையில் வியாபாரம் செய்வதை குறிக்கிறது ‘தனக்கு அநியாயம் செய்து கொண்டவர்’ என்பது வட்டி உண்பதைக் குறிக்கிறது என்றும் குறிப்பிடுகின்றனர். மேலும், ஒரு விடயத்தின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டும் இத்தகைய முரண்பாடுகள் குர்ஆனுடைய விளக்கவுரைகளிலும் ஏற்படுகின்றது.

மேலும், உலமாக்கள் நபி (ஸல்) அவர்களுடைய போதனைகளை தெளிவுபடுத்துகின்ற போதும் முரண்பாடுகள் ஏற்படுகின்றது. மேலும் இமாம்களின் தீர்ப்புக்களிலும் மார்க்க விடயங்களில் அவர்களுடைய பேச்சுக்களிலும் இது ஏற்படுகிறது. இவை பல வழிகளாகும். இவற்றுக்கு முரண்பாடு என்று சொல்லப்பட்டாலும் இவை அனைத்துமே ஒன்றுபட்ட கருத்துக்கள் என்றே எடுத்துக்ககொள்ள வேண்டும்.

ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற கருத்து வேறுபாடுகளை பொருத்தவரை அதனுடைய கருத்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்க்க முடியாத அடிப்படையில் வேறுபட்டவைகளாக நேர் எதிரானவைகளாக இருக்கும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் அல்லாஹ்வுடைய பெயர்களை விளக்குவதில் அவர்கள் அல்லாதவர்களுடன் முரண்படுவது இந்த வகையைச் சார்ந்ததாகும். அல்லது பெரும் பாவம் செய்தவர்களை காபிர்கள் என்று சொல்வதில் அஹ்லுஸ் ஸுன்னாக்களும் அவர்கள்

அல்லாதவர்களும் முரண்படுவது இவ்வகை சார்ந்ததாகும். இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற நேர் எதிரான கருத்துக்களைக் கொண்ட கருத்து வேறுபாடுகளாகும்.

கருத்து முரண்பாடுகளின் வகைகளுக்கேற்ப பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குகள்.

மார்க்க விவகாரங்களில் கருத்து முரண்பாடு ஏற்படுவது சாத்தியமானதுதான், கருத்து முரண்பாடுகள் மார்க்கத்தினுடைய அடிப்படை விடயங்களில் ஏற்படலாம் அல்லது அதன் கிளை அம்சங்களில் ஏற்படலாம் இவை இரண்டும் ஒன்று உறுதியான ஆதாரங்களை கொண்டு உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்கும் அல்லது அவ்வாறு இல்லாதவைகளாக இருக்கும் இந்த அடிப்படையில் கருத்து முரண்பாடுகளை நான்கு வகைகளாக பிரிக்கலாம்.

1. மார்க்கத்தினுடைய அடிப்படைகள்:

அதாவது: அல்லாஹ் இருக்கிறான், அவன் ஒருவன், அவனுடைய வானவர்கள், அவனுடைய வேதங்கள், மரணத்திற்குப் பிறகு அனைத்து படைப்பினங்களும் எழுப்பப்படுவது போன்ற உறுதியான ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட இஸ்லாத்துடைய அடிப்படையான விடயங்கள். இந்த விடயங்களில் கருத்து முரண்பாட்டுக்கு இடமில்லை எவ்வகையிலும் இவற்றில் கருத்து முரண்பாடு கொள்ள முடியாது. யார் இதில் சரியானதை பெற்றுக் கொண்டானோ அவன் நன்மையை அடைந்து கொண்டான். யார் இதில் தவறிழைத்தானோ அவனுக்கு குப்ரை தடுக்கக்கூடிய ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் எதுவும் இல்லை என்றால் அவன் காபிராகிவிடுவான்.

2. மார்க்கத்தினுடைய அடிப்படையான விடயங்கள் சிலதில் ஏற்படும் கருத்து முரண்பாடுகள்:

ஊதாரணமாக, மறுமையில் அல்லாஹ்வை காணுதல், குர்ஆன் படைக்கப்பட்டது என்று சொல்லுதல், அல்லாஹ்வை மாத்திரம் வணங்கியவர்கள் எவ்வாறான அடிப்படையிலேனும் நரகத்திலிருந்து வெளியேறுவார்கள் போன்ற விடயங்கள். இவ்வாறான விடயங்களில் கருத்து முரண்பாடு கொள்பவர்கள் காபிராவார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் போன்ற சிலர் இந்த கருத்தை குறிப்பிட்டுள்ளனர். இமாமவர்களின் மாணவர்களில் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய கூற்றை “வெளிப்படையா காபிர்” என்ற கருத்தில்தான் சொல்லப்பட்டுள்ளது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் “அல்லாஹ்வுடைய அருளை நிராகரித்தவர்” என்ற கருத்தில் அதற்கு கருத்து மாற்றம் சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

ஒருவர் அல்லாஹ்வுடைய தூதர் கொண்டு வந்த அனைத்தையும் உண்மைப்படுத்தி சில விடயங்களில் கருத்து முரண்படுகிறார் என்றால் அவரை காபிரென்று சொல்ல முடியாது. ஆனால், தன்னுடைய விடயங்களின் பால் மனிதர்களுடைய கவனங்களை திருப்புவதற்காக நபி (ஸல்)அவர்கள் அறிவித்ததை நிராகரிப்பவரும், நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்ததை பொய்ப்பிப்பவர், தான் சொல்வது பொய்தான் என்பதை அறிந்து கொண்ட பின்பும் அவ்வாறு சொன்னால் அவர் காபிராவார்.

3. மார்க்கத்தில் கட்டாயம் அறியப்பட்ட கிளை விவகாரங்களில் ஏற்படுகின்ற கருத்தும் முரண்பாடுகள்:

உதாரணமாக, ஐந்து நேரம் தொழுவது கடமை, ஸினா செய்வது ஹராம் என்பதைப் போன்றவை இந்த விடயம் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடான ஒன்றாகும். யார் இந்த விடயங்களில் காபிர் என்று சொல்வதற்கு அறியப்பட்ட தடைகள் ஏதும் இல்லாத நிலையில் இந்த விடயங்களுக்கு முரண்படுகிறாரோ அவர் காபிராவார்.

4. இஜ்திஹாதுக்குரிய கிளை அம்சங்கள்:

குறித்த விடயத்தின் ஆதாரங்கள் சிலருக்கு தெரியாமல் இருக்க முடியும். இது சாதாரணமாக சமூகத்தில் இடம் பெறக்கூடிய கருத்து முரண்பாடாகும். இதில் முரண்படுகின்றவர்களுக்கு சலுகை அளிக்கப்படும். சில போது ஆதாரங்கள் அவருக்கு கிடைக்காமல் இருக்கவும் அல்லது வேறு ஆதாரங்களுடன் ஒப்பிடுகையில் முரண்பாடான கருத்து அவருக்கு தோன்றுவதனாலும், குறிப்பிட்ட ஆதாரம் நம்பகமானதா என்பதில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதாலும் இதில் ஒருவர் அடுத்தவருக்கு முரண்பாடான கருத்தினைச் சொல்வது சதாரணமான விடயமாகும். இவ்வாரான விடயங்களில் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

கிளை அம்சங்களில் கருத்து முரண்பட முடியும் என்பதற்கான ஆதாரங்கள்.

1. பனூ குறைழா யுத்தத்தில் ஸஹாபாக்களுக்கு மத்தியிலே நடந்தது:

அஹ்ஸாப் யுத்த தினத்தில் நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: நீங்கள் பனூ குறைழா கோத்திரத்தாரின் இடத்திலேயே அன்றி அஸர் தொழுகையை தொழ வேண்டாம்.

என்றாலும் அவர்களின் சிலர் பனூ குறைழா கூட்டத்தினர் வசிக்கும் இடத்திற்கு செல்லும் வழியிலேயே அஸர் தொழுகையை அடைந்து கொண்டனர். அவர்களின் சிலர: நாங்கள் பனூ குறைழாவினுடைய இடத்திற்கு செல்லாத வரை அஸர் தொழுகையை தொழ மாட்டோம் என்று கூறினர். மற்றும் சிலர்: நாங்கள் அவர்களிடத்தில் சென்றடையாவிட்டாலும் அஸர் தொழுகையை தொழுவோம் என்று கூறினர். அதன்போது எங்களில் எவரும் அதை தடுக்கவில்லை. பின்பு நபி (ஸல்) அவர்களிடத்தில் அது குறிப்பிடப்பட்டது. ஆனாலும் நபி (ஸல்) அவர்கள்: அவர்களில் எவரையும் கடிந்து கொள்ளவில்லை. (புஹாரி முஸ்லிம்)

இந்த ஹதீஸுக்கு விளக்கம் எழுதிய இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். "யார் இஜ்திஹாத் செய்தாரோ அவரை பாவி என்று சொல்ல முடியாது என்பதற்கான ஆதாரமாக பெரும்பான்மையான அறிஞர்கள்

இதைக் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறான இரண்டு கருத்துக்களை கொண்டிருந்த அந்த கூட்டத்தினரில் எவரையும் கடிந்து கொள்ளவில்லை. இந்த இரண்டு கருத்துக்களில் ஏதாவது ஒன்று பாவமாக இருந்திருந்தால் நபி (ஸல்) அவர்கள் தவறான கருத்தை சொல்லி பாவத்தை செய்தவர்களை நிச்சயமாக கண்டித்திருப்பார்கள்.

2. ஸஹாபாக்கள் எந்த விடயங்களில் கருத்து முரண்பாடு கொண்டார்களோ அந்த விடயங்களில் ஒவ்வொரு சாராரும் அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஏனைய சாராருக்கு முரண்பட்டு பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்ளாத அடிப்படையில் தங்களுடைய இஜ்திஹாதின் பிரகாரம் அமல் செய்ய முடியும் என்பதில் ஒன்றுபட்டிருந்தனர். உதாரணமாக, இபாதத்துடைய விவகாரங்கள், திருமண, வாரிசு உரிமையோடு தொடர்பானவை, கொடை கொடுத்தல், அரசியல் போன்ற விடயங்களில் நடந்ததை குறிப்பிடலாம்.

பயனில்லாத விடயங்களில் கருத்து முரண்படுவதன் சட்டம்.

ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொன்னார்கள்: “நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படாத, எந்த ஒரு சான்றும் இல்லாத குர்ஆனுடைய விரிவுரைகளில் சில வார்த்தைகளிலே கருத்து முரண்பாடு நிகழலாம். அல்லது நபி (ஸல்) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்பட்ட நம்பகமானது எது? நம்பகமில்லாதது எது? என்பதை பிரித்து அறிந்து கொள்ள முடியுமான விடயத்திலே கருத்து முரண்பாடு ஏற்பட முடியும். அல்லது சரியான ஆதாரம் இல்லாதவற்றிலும் கருத்து முரண்பாடு ஏற்படலாம். இவ்வகையான கருத்து முரண்பாட்டில் எந்த நன்மையுமில்லை. அதை ஆய்வு செய்வதில் எந்தப் பயனும் இல்லை. அது தொடர்பில் பேசுவது மேலதிகமான வீணான பேச்சாகும். முஸ்லிம்கள் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை பொறுத்தவரை அல்லாஹ் அது சத்தியம் என்பதற்கான ஆதாரங்களை குறிப்பிட்டுள்ளான்.

பயனில்லாத கருத்து முரண்பாட்டிற்கு உதாரணமாவது: கஹ்ப் வாசிகள் விடயத்திலே மனிதர்கள் கருத்து முரண்பாடு கொள்வதை குறிப்பிடலாம். அதேபோன்று நூஹ் (அலை) அவர்களுடைய கப்பல் எவ்வளவு காலம் தரித்தது என்பதில் கொண்டுள்ள கருத்து முரண்பாட்டைக் குறிப்பிடலாம். இவ்வாறான விடயங்கள் அடுத்தவர்களிடமிருந்து அறிவிக்கப்படுவதே அல்லது குறித்த சாரரிடம் இருந்து அறிவிக்கப்படுவதே அதை நாம் சரியாக அறிந்து கொள்வதற்கான வழியாகும். அதைத் தவிர்த்து அவ்வாறான விடயங்களில் கருத்து முரண்பாடு கொள்வதில் எந்தப் பயனும் கிடையாது.

கருத்து முரண்பாடுகளின் காரணங்களுக்கேற்ப அதன் வகைகள்.

1. மனோ இச்சையின் அடிப்படையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகள்:

சில நேரம் ஒரு மனிதன் தன்னுடைய விவகாரத்தை சாதித்துக் கொள்வதற்காக அல்லது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கருத்து முரண்பாடுகளை உருவாக்க முடியும். சில நேரம் தான் ஒரு விளக்க சாலி, தான் ஒரு அறிஞன், மார்க்க சட்டங்களை அறிந்த ஒருவர் என்பதை வெளியில் காட்டும் நோக்கத்தில் கருத்து முரண்பாடு கொள்வதற்கான வாய்ப்புள்ளது. இவ்வாறான கருத்து முரண்பாடுகள் எவ்வகையில் வெளிப்பட்டாலும், எவ்வாறான அடிப்படையில் அவை இருந்தாலும் மனோ இச்சை அதில் தாக்கம் செலுத்துவதன் காரணமாக இழிவுபடுத்தப்பட்ட, தடுக்கப்பட்ட ஒன்றாகும். மனோ இச்சை என்பது நலவுகளைத் தராது.

அல்லாஹ் சொல்கிறான்: ‘‘நீர் மனோ இச்சையை பின்பற்ற வேண்டாம். அவ்வாறெனில் அது அல்லாஹ்வின் பாதையை விட்டும் உன்னை வழி தவறச் செய்துவிடும். நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி தவறிகின்றனரோ அவர்கள் விசாரணைக்குரிய நாளை மறந்ததன் காரணமாக அவர்களுக்கு கடுமையான வேதனை உண்டு’’ (38:26)

வழி கெட்டவர்கள், சத்தியத்தை விட்டும் நெறிபிறழ்ந்தவர்கள், தங்களுடைய மனோ இச்சையின் காரணமாகவே அவ்வாறு சென்றார்கள். அல்லாஹ் சொல்லுகிறான்: ‘‘நிச்சயமாக அதிகமானோர்

அறிவின்றி தமது மனோ இச்சைகளினால் பிறரை வழி கெடுக்கின்றனர் நிச்சயமாக உமது இரட்சகன் வரம்பு மீறுவோரை நன்கு அறிந்தவன்'' (06:119)

மனோ இச்சை பலவகைப்படும். அதனுடைய வழிகள் கரடு முரடானவை. அதனுடைய வளங்கள் பலவகையானவை. அவை அனைத்துமே ஆசை, தன்னை பெரிதுபடுத்திக் கொள்வதில் உள்ள விருப்பம், நான் என்ற மமதை, அடுத்தவர்களை விட தன்னை உயர்வாக கருதுகின்ற தன்மை என்பவற்றினாலேயே ஏற்படுகின்றது. இதனால்தான் மார்க்கத்தில் இல்லாத விடயங்களை பின்பற்றுகின்றவர்கள், இல்லாத விடயங்களைச் சொல்பவர்கள், அவ்வாறான விடயங்களில் பிரிவினையை ஏற்படுத்துபவர்கள் மனோ இச்சைக்காரர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

ஏனெனில் அவர்கள் தங்களுடைய மனோ இச்சைகளை பின்பற்றினார்கள். மார்க்க ரீதியான ஆதாரங்களை அவர்கள் எடுக்கவில்லை. அவர்களுக்கு ஆதாரம் தேவைப்படுகின்ற நேரம் தனது மனோ இச்சைகளில் இருந்தே கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

ஆதாரங்கள் எங்கிருந்து எடுக்கப்பட வேண்டுமோ, விளக்கங்கள் எங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமோ அங்கிருந்து அவர்கள் ஆதாரங்களையோ விளக்கங்களையோ பெற்றுக் கொள்ளாமல் தங்களுடைய மனோ இச்சைகளை முற்படுத்தினர். தங்களுடைய கருத்துக்களில் பிடிவாதமாக இருந்தனர். தங்களுடைய மனோ இச்சையை சரி காண்பதற்கும், தங்களுடைய கருத்துக்களை நிலை நிறுத்திக் கொள்வதற்கான ஊடகமாகவும் மார்க்க ரீதியான ஆதாரங்களை பயன்படுத்தினர். மெய்யியலாலர்களுடைய

வழிகேடுகளை முற்படுத்தினர். மெய்யியலாளர்களின் முட்டாள் தனமான ஆதாரங்களையும் கருத்துக்களையும் முற்படுத்தி தாங்களும் வழிகெட்டு அடுத்தவர்களையும் அல்லாஹ்வுடைய பாதையை விட்டும், நேரான வழியை விட்டும் வழி கெடுத்தனர்.

அவர்களுடைய மார்க்க விவகாரங்களிலே அவர்களிடம் ஷைத்தான் குழப்பங்களை ஏற்படுத்தி விட்டான். அல்லாஹுத்தஆலா சொல்கிறான்: ‘‘செயல்களில் பெரும் நஷ்டவாளிகள் பற்றி உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா என்று நபியை நீர் கேட்பீராக. அவர்களின் முயற்சிகள் இவ்வுலக வாழ்வில் வீணாகி விட்டன. அவர்களோ நிச்சயமாக தான் நல்லதையே செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.’’ (18:103,104)

இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: நிச்சயமாக இந்த வசனம் ஹவாரிஜ்கள் அதுபோன்று யூத கிறிஸ்தவர்கள் மற்றும் அவர்கள் அல்லாதவர்களையும் உள்ளடக்குகின்றது. ஏனெனில், இந்த வசனம் குறிப்பாக இவர்கள் விடயத்தில்தான் இறங்கியது. அது போன்று சரி என நினைத்து அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படாத முறையில் அல்லாஹ்வை வணங்கிய ஒவ்வொருவரையும் இந்த வசனம் பொதுவாக உள்ளடக்கும். அவர் அவருடைய அமல் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று நினைக்கிறார். ஆனால், அவர் தவறிழைத்தவராவார். அவருடைய அமலும் நிராகரிக்கப்பட்டதாகும்.

என்றாலும், அல்லாஹ் இவ்வாரான வழிகேடுகள், பிரிவினைகள், கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும் அவனுடைய சத்திய மார்க்கத்தை ஆரம்பத்தில் சொன்ன அடிப்படையில் அவனுடைய நாட்டத்திற்கு ஏற்ப பாதுகாக்கின்ற, நபி (ஸல்) அவர்களுக்குப்

பிறகு சிறந்த முறையில் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்று கின்ற சிலரை தயார் செய்தான். அவர்கள்தான் ஸஹாபாக்கள். நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த மார்க்கத்தை சிறந்த அடிப்படையில் எற்றி வைத்தார்கள். அவர்களுக்குப் பிறகு வந்த தாபியீன்கள் முன்னோர்களை பின்துயர்ந்து சிறப்பான ஒரு கூட்டமாக செயல்பட்டனர். அவர்கள் தங்களுடைய பங்குக்கு இந்த மார்க்கத்தை அமானிதமான அடிப்படையில் அவர்களுக்கு பின்னால் வந்த அறிஞர்களுக்கு எத்தி வைத்தார்கள்.

மேலும், அவர்களுடைய வழியில் நடந்தவர்களுக்கும், அவர்களுடைய வழிகாட்டலை கேட்டு பின்பற்றியவர்களுக்கும் எத்தி வைத்தார்கள். கருத்து முரண்பட்டு பிளவுபட்டுச் செல்பவர்களை அவர்கள் கவனிக்கவில்லை. மேலும் வழி கெட்ட இயக்கங்கள் மற்றும் பித்அத்வாதிகள் காலா காலமாக தோன்றிய வழிகேடுகளை பின்பற்றி வருவோரின் இழிவுபடுத்தல்களையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. பரம்பரை பரம்பரையாக இந்த மார்க்கத்தை அடுத்தவர்களுக்கு எத்தி வைத்தனர். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

2. சத்தியத்திற்காக ஏற்படும் கருத்து முரண்பாடு:

சிலபோது கருத்து முரண்பாடுகள் மனோ இச்சையை பின்பற்றாது, சுயநல நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக, சத்தியத்திற்காக மாத்திரம் உருவாகின்றன. இது ஈமான் விதியாக்கிய ஒரு முரண்பாடாகும். சிந்தனை வேண்டி நிற்கும் ஒன்றாகும். விசுவாசம் கொண்டவர்கள் காபிர்களுக்கு முரண்படுவது, இணைவைப் பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் முரண்படுவது என்பவற்றை இந்த வகையில் குறிப்பிடலாம். இது அவசியம் இருக்க வேண்டிய

முரண்பாடாகும். அது போன்று ஒரு முஸ்லிம் நிராகரிப்பாளர்களுடைய கொள்கைகளுக்கு முரண்படுவது, நிராகரிப்பாளர்களுடைய கொள்கைகளை பின்பற்றுபவர்களுக்கு முரண்படுவது, யூத, கிறிஸ்தவ, சிலை வணக்க சிந்தனையாளர்களுக்கு முரண்படுவது இவ்வகை சார்ந்ததாகும். இவர்கள் போன்றவர்களுடன் முரண்படுவது கட்டாயமானதாகும். ஒரு இறை விசுவாசியான முஸ்லிமுக்கு இவ்வாறு முரண்படாமல் இருக்க முடியாது. அல்லது இவ்வாறான இஸ்லாத்திற்கு முரண்பட்ட விடயங்களை நீக்குவதென்றால் உண்மையின் பால் அவனால் அழைக்காமல் இருக்க முடியாது. ஏனெனில், இந்த முரண்பாடு அவனுடைய ஈமானின் வெளிப்பாடாகும். சத்தியம் அவனில் கலந்ததனால் வரும் முரண்பாடாகும்.

3. புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் இடைப்பட்ட முரண்பாடு:

இது மார்க்கத்தின் கிளை அம்சங்களில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளாகும். மார்க்கத்தினுடைய கிளை அம்சங்களில் ஏதாவது ஒன்றில் இரண்டு விதமான கருத்துக்கள் உருவாகி அவை இரண்டில் எதையும் உறுதியானதாக, திட்டவட்டமானதாக குறிப்பிட முடியாத அளவுக்கு பல எடுகோள்களை கொண்டமைந்த கருத்து முரண்பாடுகளாகும். அதில் சிலது சிலதை விட ஏற்றமுடையதாக இருக்கும்.

ஊதாரணமாக, பின்வருவனவற்றை குறிப்பிடலாம். வேண்டுமென்று ஒருவர் வாந்தி எடுப்பதால், காயத்திலிருந்து வெளியேறும் இரத்தத்தால் வுழு முறியுமா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் இருக்கின்ற கருத்து முரண்பாடு, அதேபோன்று இமாமுக்கு பின்னால் ஜமாஅத்தாக தொழுபவர் குர்ஆனை ஓதுவது தொடர்பான கருத்து முரண்பாடு, அது போன்று சூரத்துல் பாத்திஹா ஓதும்

போது பிஸ்மி ஓதுவதில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு, வெளிப்படையாக சத்தமிட்டு ஆமீன் சொல்லுதல் இது தவிர உள்ள ஏராளமான கிளை அம்சங்களில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளை சொல்ல முடியும். இந்த வகை சார்ந்த கருத்து முரண்பாடுகளில் தவறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. இதிலே இறையச்சத்துடன் மனோ இச்சையும் கலந்திருப்பதற்கான சாத்திய கூறுகள் உள்ளன. இவ்வாறான கருத்து முரண்பாடுகளின் போது ஏற்றமானது எதுவோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்டது எதுவோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான கருத்து முரண்பாடான விடயங்களில் சரியானதை கண் கொள்வதற்காக முயற்சிக்கும் ஒருவர் கருத்து முரண்பாடுகளின் போது பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்கள், கருத்து முரண்பாடுகளை ஒழுங்கமைக்கின்ற விதிகள், கருத்து முரண்பாடுகளின் போது பின்பற்றக் கூடிய ஒழுக்க நெறிகளை பின்பற்றியே ஈடுபடுதல் வேண்டும். அவ்வாறு பின்பற்ற தவறும் பட்சத்தில் இவ்வாறான கருத்து முரண்பாடுகள் பிளவுகள், சச்சரவுகளின் பால் இட்டுச் செல்லும் அதேபோன்று அவசியமான விதிகளை பின்பற்றாமல் இருக்கும்போது கருத்து முரண்பாடுள்ள இருவரும் மனோ இச்சையை பின்பற்றுவதற்கும் நெறிபிரழ்வதற்கும் ஷைத்தானுடைய தூண்டுதல்களில் விழுந்து விடுவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்கத்தின் கிளை அம்சங்களில் அதிகமானவற்றிலும் சில அடிப்படையான விடயங்களிலும் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு உள்ளது. அவர்களில் சிலரிடம் தவறுகளும் சில வெறுக்கத்தக்க வார்த்தை பிரயோகங்களும், நழுவல்களும் ஏற்பட்டுள்ளன.

நிச்சயமாக நாம் அவர்களில் யார் அதிகமாக சரியானவற்றைச் செய்கின்றார்களோ அவர்களைப் பின்பற்றுமாறுதான் ஏவப்பட்டுள்ளோம். நிச்சயமாக குர்ஆன் சுன்னாவை பின்பற்றுவதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது என்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். அவர்கள் கருத்து முரண்பாடு கொண்டதெல்லாம் கியாஸ் அடிப்படையில் அல்லது ஆதாரத்தை விளங்குவதிலாகும்.

மார்க்கத்தின் கிளை அம்சங்களிலும் சில அடிப்படையான விடயங்களிலும் அறிஞர்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் கருத்து முரண்பாடுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், அவர்கள் அனைவரும் அல்லாஹ்வை கண்ணியப்படுத்துகிறார்கள். நிச்சயமாக அவனைப் போன்று எவரும் இல்லை. அவனுக்கு ஒப்பானவர் யாருமில்லை என்று நம்புகிறார்கள். அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அவர்கள் எதை மார்க்கமாக்கினார்களோ அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் அனைவரினதும் வேதம் ஒன்றாக இருக்கிறது. அவர்களுடைய நபி ஒருவராக இருக்கிறார். அவர்கள் அனைவரின் கிப்லா ஒன்றாகவே இருக்கிறது.

ஆனால், அவர்களுக்கிடையில் கருத்து பரிமாற்றங்கள் விவாதங்கள் சத்தியத்தை தெளிவுபடுத்திக் கொள்வதற்காகவும் மிகச்சிறந்த அறிவாளிகள், அவர்களை விட குறைந்த அறிவாளிகளுக்கு பயனளிப்பதற்காகவும், பலவீனமானவர்கள் அல்லது கவனமற்று இருப்பவர்களுக்கு உணர்வூட்டுவதற்காகவுமே அவர்களுக்கு மத்தியில் கலந்துரையாடல்கள் விவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் நம்பகமான, தெளிவான ஒரு ஆதாரத்தைப் பெற்றுக் கொண்டால் அது முதவாதிரானதாக அல்லது ஆஹாதானதாக இருந்தாலும் ஒருபோதும் அதற்கு அவர்கள் முரண்படுவதில்லை. அதை முழுமையாக ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தார்கள்.

கருத்து முரண்பாட்டின் காரணங்கள்.

கருத்து முரண்பாட்டிற்கான காரணங்கள் மிக அதிகமானதாகவும், பலவகையானதாகவும் காணப்படுகின்றன. ஸஹாபாக்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்குரிய காரணங்கள் அது போன்று அவர்களுக்கு பின்னால் வந்த இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்குரிய காரணங்களென ஏற்றுக் கொள்ளத் தக்க காரணங்களும் உள்ளன. இவ்வகையான கருத்து முரண்பாடுகள் இஸ்லாமிய சமூகத்தில் அதிகம் ஏற்பட்டுள்ளன. புதிய விடயங்களில் அவசியம் இவ்வாறான முரண்பாடுகள் உருவாகின்றன. அந்த விடயங்களுக்கான சட்டங்களை தெரிந்து கொள்வதற்காக ஒருவர் முயற்சிக்கும் போது கருத்து முரண்பாடுகள் வருவது சாத்தியமானது. ஆனால், இவ்வாறான கருத்து முரண்பாடுகளினால் ஏற்படுகின்ற விளைவுகள் கருத்தியலை தாண்டியதாக அல்லது இஜ்திஹாதை தாண்டியதாக இருத்தல் கூடாது. எனும் அடிப்படையில், விதிகளைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் சில விடயங்களிலே கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களை ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் பின்வருமாறு சுருக்கி கூறுகிறார்கள்.

1. நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸை சொல்லி இருக்க மாட்டார்கள் என்று அவர்களில் சிலர் நம்பியது.
2. குறித்த செய்தி எடுத்துக் கொள்ளப்பட்ட விடயத்துடன் தொடர்புடையதல்ல என்று அவர்களில் சிலர் நம்பியது.

3. குறித்த சட்டம் மாற்றப்பட்டு விட்டது என்று சிலர் நம்பியது. இவ்வாறான மூன்று காரணிகளில் இருந்தும் பல்வேறு காரணிகள் உருவாகின்றன. அதனூடாகவே கண்ணியமிக்க இமாம்களுக்கு மத்தியிலும், அவர்களைப் பின்பற்றியவர்களுக்கிடையிலும், அவர்களுடைய வழி சென்றவர்களுக்கு மத்தியிலும் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றன.

கருத்து முரண்பாடுகளுக்குரிய காரணங்களில் சிலது நிராகரிக்கப்பட வேண்டியவை, ஏற்றுக் கொள்ள முடியாதவை, நியாயமற்றவைகளாக புத்தி அடிப்படையிலும் மார்க்க ரீதியாகவும் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக உள்ளன. வழிகெட்ட சிந்தனை பிரிவுகள் மத்ஹபுகளுக்குரிய இமாம்களுக்கும் அவர்கள் அல்லாதவர்களுக்கும் முரண்படுவதை இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

இவைகள், மனோ இச்சையை பின்பற்றுவதில் பிடிவாதம், மத்ஹபுக்குரிய அறிஞர்கள் மற்றும் ஏனைய இஸ்லாமிய அறிஞர்கள் தொகுத்துள்ள சட்டங்கள், விதிகளை பற்றிய அறியாமை காரணமாகவே ஏற்படுகின்றது. அதுபோன்று மார்க்கத்தினுடைய சட்ட விதிகள் அடிப்படைகளை அறியாமையினாலும், இஸ்லாமிய அறிஞருடைய கூற்றினாலோ, அல்லது குர்ஆனிலிருந்து, ஹதீஸிலிருந்து, ஸஹாபாக்களின் கூற்றின் மூலமோ அல்லது இஜ்மாவின் மூலமோ தோன்றாத அசத்தியமான விளக்கங்களை பின்பற்றியதாலுமே ஏற்படுகின்றது.

தற்காலத்தில் முரண்பாடுகளும் பிரிவினைகளும் ஏற்படுவதற்கான சில காரணங்களில்.

இஸ்லாத்தினுடைய விரோதிகள் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினைகளை உருவாக்குவதற்காகவும் சந்தேகங்களை உருவாக்குவதினூடாகவும் இஸ்லாமிய சமூகத்தை நெறிப்படுத் துகின்ற விடயங்களில் ஐயங்களை தோற்றுவிப்பதற்காக செய்த மிக மறைவான ஒழுங்குபடுத்தல்கள் நுணுக்கமான திட்டமிடல்கள் மூலம் முயற்சிக்கின்றனர். மேலும், இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் அவர்களை சூழ்ந்து கொண்டவர்களும் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையை உருவாக்குவதற்காகவும் அவர்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்வதற்காகவும் அவர்களுக்கு மத்தியில் தவறான கொள்கையை பரப்புதற்காகவும் பித்அத்துக் களையும் மனோ இச்சைகளையும் பரப்ப அதிகம் முயற்சிக்கின்றனர். இதற்குரிய காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும். இஸ்லாமிய ஷரீஆவினுடைய அடிப்படை விடயங்களில் சரியான அறிவின்மை.

இஸ்லாமிய சட்டதிட்டங்களை அறியாமல் இருப்பதன் காரணமாக சரியான இஸ்லாமிய கொள்கை பற்றிய தெளிவில்லாதவர்களாக இருப்பது.

பித்அத்துக்கள், பகுத்தறிவுக்கு உடன்படாத விடயங்கள், கபுறு வணங்குபவர்களாக சூனியக்காரர்களாக இருக்கின்ற பிரச்சாரகர்களுடைய ஆதிக்கம். பித்அத் வாதிகளான சூபிய்யாக்களின் இறைவனுக்கு கொடுக்க வேண்டிய பண்புகளை தங்களுடைய ஷேஹ்மார்களுக்கும் வலிமார்களுக்கும் கொடுக்கின்ற தன்மை.

இத்தகையவர்கள்தான் மார்க்கத்தின் சட்ட திட்டங்களை சிதைத்தார்கள். அதனுடைய யதார்த்தங்களை அசாத்தியமானதாக ஆக்கினார்கள். முஸ்லிம்களில் மிகப்பெரும் சாராரை விட்டும் சரியான இஸ்லாமிய கொள்கையை, இஸ்லாத்தினுடைய ஒளியை தடுத்தார்கள். பாமர முஸ்லிம்களுக்கு மத்தியிலும் இஸ்லாத்தினுடைய தூய்மையான பரிசுத்தமான பயன்பாடுகளுக்கு மத்தியிலும் தடுப்பை ஏற்படுத்தினார்கள். இவை ஒவ்வொன்றும் முஸ்லிம்கள் பின்வாங்குவதற்கும் அடுத்தவர்களுக்கு அடிமைப்பட்டிருப்பதற்கும் அவர்களுக்கு மத்தியில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான மிகப்பெரும் காரணங்களாக இருக்கின்றன.

எங்களுடைய காலத்தில் முஸ்லிம் சமூகம் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கின்ற, ஒருவருக்கு எதிராக அடுத்தவர் போராடுகின்ற அளவுக்கு குழுக்களாகவும் பிரிவுகளாகவும் காணப்படுவதற்கு காரணமாக இருப்பது: “கடும்போக்கு, இஸ்லாத்தினால் தடுக்கப்பட்ட தங்களுக்கு அறிவில்லாத விடயங்களில் விவாதிப்பதற்கு தலைப்படுவது, முஸ்லிம்களை அவர்களுடைய மார்க்க விடங்களில் சந்தேகத்தில் வீழ்த்தி விடுவதுமாகும்”

மிகவும் வெறுக்கத்தக்க பிடிவாதம், தனக்கு அறிவில்லாத விடயங்களில் விவாதிப்பதற்கு தலைப்படுவதன் காரணமாக துரதிஷ்டவசமாக உலகத்திலே இருக்கின்ற எந்த சமூகத்திற்கு மத்தியிலும் இல்லாத பிரிவினைகளும் பிளவுகளும் இஸ்லாமிய சமூகத்திற்கு மத்தியில் இருக்கின்றன. அல்லாஹ் அவர்களுக்கு நேர் வழி காட்டுவானாக.

நிச்சயமாக, கடும்போக்கு என்பது தனிப்பட்ட ஒரு மனிதரிலும் இஸ்லாத்தில் அடுத்த மனிதர்கள் விடயத்திலும் அடுத்தவர்களோடு

நடந்து கொள்ள வேண்டிய முறையிலும் ஒரு இறுக்கத்தன்மையை உருவாக்குகின்றது. மார்க்கத்தினுடைய சட்ட திட்டங்களோ மார்க்கத்தினுடைய அடிப்படை நோக்கங்களோ பணிக்காத முறையில் அவர்களுடன் நடந்து கொள்ள செய்கிறது.

இஸ்லாமிய சட்ட திட்டங்கள் என்பது இலகுபடுத்தலை கவனிப்பதோடு கஷ்டத்தை நீக்குதல், விரிவான தன்மையை உருவாக்குதல், உரிய இடங்களில் சலுகைகளை எடுத்துக்கொள்ள தூண்டுதல், மேலும் அடுத்த மனிதர்களுடைய விடயத்தில் நல்லெண்ணம் கொள்ளல், அவர்கள் விடயத்தில் இரக்கம் கொள்ளல், சந்தேகங்களை தவிர்த்தல், பொதுமக்களுக்கும் விசேடமானவர்களுக்கும் உபதேசம் செய்தல், தவறிழைப்பவர்களை மன்னித்தல், அல்லாஹ்வுடைய வரையறைகளை மீறாத வகையில் தவறிழைத்தவர்களுக்கு தவறிழைத்ததற்கான காரணங்களை தேடுதல் போன்றவற்றிலே மார்க்கம் நிலை பெற்று உள்ளது.

இஸ்லாமிய சட்டங்களை பிரயோகிப்பதில் அவசரம் காட்டுதல், இஸ்லாமிய அறிஞர்களுடைய கருத்துக்கள் அவர்களிடம் இருந்து வந்த சில சட்டங்களுக்காக அதிகபட்ச்சமாக அவர்களை காபிர்கள் என்று வர்ணித்தல் என்பன கடும் போக்கினுடைய சில அடையாளங்களாகும். பிற சமூகங்களில் இருந்து வந்த தத்துவங்கள் கருத்துக்களினால் முஸ்லிம்கள் தாக்கமடைவதும் மார்க்கத்தில் புதுமைகளை உருவாக்குதல், சமகால முன்னேற்றத்திற்கு ஏற்ப மார்க்க சட்ட திட்டங்களை அணுகுதல் போன்ற வாதங்களினால் சிந்தனை, கலாச்சாரம் பிற இயக்கங்களிலே தங்கி இருப்பதும் முற்காலம் தொடக்கம் தற்காலம் வரை கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களாக இருந்திருக்கின்றன.

இது மிகவும் ஆபத்தான ஒரு விடயமாகும். நபி (ஸல்) அவர்கள், அவர்களின் தோழர்கள், அவர்களை பின்துயர்ந்தவர்களிடம் இருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட மார்க்கத்தினுடைய அடிப்படை அம்சங்களையே அச்சுறுத்துகின்ற விடயமாக இது உள்ளது. அதுபோலவே நன்மையை ஏவி தீமையை விட்டு விடுவதும் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். மேலும் முஸ்லிம்களின் ஆட்சியாளர்கள் தலைவர்கள் இஸ்லாமிய சமூகத்திற்கு பொறுப்பானவர்களாக இருக்கின்றவர் களுக்கு அவசியமாக செய்ய வேண்டிய உபதேசங்களை விட்டு விடுவதும், மார்க்கத்தில் வழிகெட்டுச் செல்பவர்களுக்கு அதை தெளிவுபடுத்தாமல் சமரச போக்கை கடைபிடிப்பதும் கருத்து முரண்பாடு ஏற்படக்கூடிய காரணிகளாகும்.

நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்: ‘‘மூன்று விடயங்களை ஒரு இறை விசுவாசி பின்பற்றும் காலமெல்லாம் அவனது உள்ளம் அவனுக்கு மோசடி செய்யாது. அல்லாஹ்வுக்காக செயற்படுதல், முஸ்லிம் தலைவர்களுக்கு உபதேசம் செய்தல், அவர்களுடைய கூட்டமைப்போடு சேர்ந்திருத்தல் நிச்சயமாக அவர்களுடைய பிரார்த்தனைகள் அவர்களை சூழ்ந்ததாக உள்ளன.’’ (ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப்)

நபி (ஸல்), ஸஹாபாக்கள், தாபிஈன்களுடைய காலத்தில் கருத்து முரண்பாடுகளின் போது கடைபிடிக்கப்பட்ட ஒழுங்குகள்.

கருத்து முரண்பாடுகளின் பண்புகளும் அதனுடைய ஒழுக்கங்களும்:

மனிதர்கள் தங்களுடைய மனோநிலைகளிலும் விளக்கங்களிலும் ஏற்றத்தாழ்வு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் சங்கமிக்கின்ற போதும் அவர்களுக்கிடையில் மோதல்களும் முரண்பாடுகளும் ஏற்படாவிட்டாலும் கருத்தில் நெறிபிரழ்வுகளும் நெருக்கீடுகளும் ஏற்படுவது இயல்பானதாகும்.

இஸ்லாம் தன்னுடைய வழிகாட்டுதல்களில், தன்னுடைய உபதேசங்களில் பிரிவினைகள் மற்றும் பிரச்சினைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளை தெளிவுபடுத்தியுள்ளது. அதுபோன்று கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உள்ளங்கள் நேசத்தையும் பரிவையும் ஞாபகப்படுத்தி ஒருவருக்கொருவர் தங்களுக்குள் பிணைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை ஏவியிருப்பதோடு பிரிவதையும் தொடர்புகளைத் துண்டித்து புறமுதுகிட்டுச் செல்வதையும் தடை செய்துள்ளது. எனவே, இது தொடர்பில் நபி (ஸல்) அவர்களின் வரலாற்றிலும், ஸஹாபாக்கள், தாபியீன்கள் வரலாற்றிலும் வந்துள்ள கருத்து முரண்பாட்டின் ஒழுக்கங்கள் சிலவற்றை அவதானிப்போம்.

1. பிரச்சினைகள் பெரிதாவதற்கு முன் ஆரம்ப கட்டங்களில் தீர்த்துவைத்தல்.

நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய தோழர்களுக்கு குர்ஆனைக் கற்றுக்கொள்ளும்போது முரண்பாடு ஏற்பட்டால் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களில் மிக முக்கியமான ஒரு ஒழுக்கத்தை கற்றுக் கொடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘உங்களின் உள்ளங்கள் ஒற்றுமைப் படுவதில் குர்ஆனை நீங்கள் படியுங்கள் எதில் உங்களது உள்ளங்கள் முரண்படுகின்றனவோ அதில் எழுந்து சென்று விடுங்கள்’’ (புஹாரி முஸ்லிம்)

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை விளங்கப்படுத்தும் போது ‘‘குர்ஆனை விளங்குவதில் உங்களுக்கு முரண்பாடு வந்தால் என்று தான் அது விளங்கப்பட வேண்டும். மேலும் ‘‘நீங்கள் எழுந்து சென்று விடுங்கள்’’ என்பது நீங்கள் அந்த கருத்து வேறுபாட்டில் தொடர்ச்சியாக இருந்து தீமைகளின் பால் அது உங்களை இட்டுச் செல்லாமல் இருப்பதற்காக விளக்கங்கள் வித்தியாசப்படுகின்ற போது அதை நிறுத்திவிட்டு எழுந்து செல்லுங்கள் என விளங்கப்பட வேண்டும்.’’ என்று குறிப்பிடுகின்றார்கள்.

இமாம் அல் காழி இயாழ் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: ‘‘அந்த நேரம் அந்தக் காலத்தில் முரண்பட்டுக் கொள்வது அவர்களுக்கு தீங்கிழைக்கக் கூடிய விடயங்கள் இறங்குவதற்கு காரணமாக அமைந்துவிடலாம் என்பதற்காக நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்று அவர்களுடைய காலத்திற்கு மாத்திரம் இருக்கக்கூடும்.’’ அல்லாஹ் சொல்கிறான்: ‘‘நீங்கள் சில விடயங்களை

பற்றி கேட்காதீர்கள். அந்த விடயங்கள் உங்களுக்கு வெளிப்படுத்தப்படுமாயின், அவை உங்களுக்கு தீங்கிழைத்துவிடும்.”

இந்த ஹதீஸை பின்வருமாறு எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் அதனுடைய கருத்துக்களில், நீங்கள் எதில் உடன்படுகிறீர்களோ அதனை பின்பற்றுங்கள் எதில் உங்களுக்கு முரண்பாடுகள் ஏற்படுகின்றனவோ அல்லது சந்தேகங்கள் ஏற்படுகின்றதோ, பிரிவினையின்பால் இட்டு செல்கின்ற விடயங்கள் எதில் உருவாகின்றதோ, அதை விட்டுவிடுங்கள். தெளிவாக இருக்கின்ற, உங்களுக்கு மத்தியில் ஒற்றுமையை அவசியப்படுத்துகின்ற, உங்களுக்கு மத்தியில் ஒத்த கருத்தை ஏற்படுத்துகின்ற விடயங்களை பின்பறறுங்கள்.

நபி (ஸல்) சொல்கிறார்கள்: சந்தேகத்திற்கிடமானவற்றை பின்பற்றுகின்றவர்களை நீங்கள் கண்டால் அவர்கள் விடயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். மேலும், நபி (ஸல்) அவர்களுடைய இந்த தடை குர்ஆனை எத்தி வைப்பதில் உங்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடு உங்களை பிரித்துவிடக் கூடியதாக இருந்தால், அந்தப் பிரிவினையைத் தொடர்ச்சியாக பேணுவதாக இருந்தால் அத்தகைய முரண்பாடுகளை விட்டும் தடுப்பதாகவே இந்த ஹதீஸை நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதுபோலவே, இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுக்கும் வேறு இரண்டு ஸஹாபாக்களுக்குமிடையில் குர்ஆனை ஓதுவதில் ஏற்பட்ட முரண்பாடுகளின் போது நடந்த சம்பவத்தையும் குறிப்பிடலாம். அதை நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்ட போது அவர்கள் அனைவரும் சிறப்பாகவே ஓதியுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

எனவே, கருத்து முரண்பாடுகள் முற்றி ஒருவருக்கொருவர் தவறிழைக்கும் அளவுக்கு விரோதத்தின் பால் அது இட்டுச் செல்வதற்கு முன்னரே ஆரம்ப கட்டத்தில் இஸ்லாம் விழித்துக் கொண்டு அந்த கருத்து முரண்பாட்டை தீர்த்துள்ளது.

புஹாரியில் வரக்கூடிய ஒரு ஸஹீஹான செய்தியில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நீங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்து விடாதீர்கள். ஒருவருக்கொருவர் புறமுதுகிட்டுச் செல்லாதீர்கள். ஒருவருக்கொருவர் கோபிக்காதீர்கள். ஒருவருக்கொருவர் பொறாமைப்படாதீர்கள். அல்லாஹ்வுடைய அடியார்களாக சகோதரர்களாக ஆகிவிடுங்கள்.” “ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்திருப்பது ஹராமாகும்.” என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

மூன்று நாட்கள் என்ற காலக்கெடு, அவனிடம் இருக்கின்ற கடுமையான தன்மை குறைந்து அவனுடைய கோபம் குறைவதற்கு போதிய காலமாகும். அதன் பிறகு ஒரு முஸ்லிம் அவனுடைய சகோதரர்களுடன் தொடர்பினை பேணுவது அவசியமாகும். அவர்களுடன் அவன் பிரச்சனைக்கு முன்னர் எப்படி இருந்தானோ அந்த அடிப்படையில் அவனுடைய நடத்தைகளை வைத்துக் கொள்வது அவசியமாகும்.

மேகக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து வானத்தை மறைக்கும் போது பலமான ஒரு காற்று வீசி அந்த மேக கூட்டங்களை கலைத்து வானத்தின் முகடு தெரிவது போலவே மு.்.மின்களுடைய உள்ளங்கள் வெறுப்புணர்வை உருவாக்கிக் கொண்டதன் பிறகு அதில் எதுவும் இல்லாத வகையில் அழித்து மூன்று நாட்களின் பின் தூய்மையான உள்ளத்துடன் பழைய உறவுகளை

புதுப்பித்துக் கொண்டு பிளவுகளுக்கு, கருத்து முரண்பாடுகளுக்கு முன்னர் எவ்வாறு தங்களுடைய உறவை பேணினார்களோ அது போன்று தங்களுடைய உறவை பேணுவது அவசியமாகும்.

2. கருத்து முரண்பாடுகளின் போது அவசரமாக அல்லாஹ்வின் பாலும், அவனுடைய தூதரின் பாலும் மீளுதல் வேண்டும்.

ஸஹாபாக்கள் முடியுமான அளவு தங்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடில்லாமல் இருக்க முயற்சித்தார்கள். அவர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டால் அவசரமாக குர்ஆனின் பாலும் சுன்னாவின்பாலும் மீள்பவர்களாக இருந்தார்கள். ஸஹாபாக்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகளின் போது சில நேரம் அதனுடைய ஒழுங்கை சொல்கின்ற பொறுப்பை குர்ஆன் ஏற்றுக் கொண்டது.

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ரழி) அவர்களை தொட்டும் அறிவிக்கக்கூடிய ஹதீஸிலே நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: “மிக நல்ல மனிதர்களான அபூபக்கர் (ரழி) அவர்களும் உமர் (ரழி) அவர்களும் அழிந்து விடப் பார்த்தார்கள். இருவரும் நபி (ஸல்) அவர்களிடத்தில் பனூ தமீம் கோத்திரத்தினர் வந்தபோது சத்தத்தை உயர்த்தி கருத்து முரண்பாடு கொண்டனர். அவர்களில் ஒருவர் அக்ரா.ஃ. பின் ஹாபிஸின்பால் சுட்டிக்காட்டினார். மற்றவர் க.ஃ.கா பின் ம.ஃ.பதாவை சுட்டிக்காட்டினார். அபூபக்கர் (ரழி) அவர்கள் சொன்னார்கள் எனக்கு முரண்படுவதை தவிர வேறு எதையும் நீ நாடவில்லை. உமர் (ரழி) அவர்களோ நான் உங்களுக்கு முரண்படுவதை விரும்பவில்லை. என்றார்கள். அந்த விடயத்தில் இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு இருவரும்

சத்தத்தினை உயர்த்தினர். அல்லாஹ் அல்குர்ஆனிலே அது தொடர்பாக வசனத்தை இறக்கினான். உங்களுடைய சத்தத்தை நபியினுடைய சத்தத்திற்கு மேலால் உயர்த்தாதீர்கள். இப்னு சுபைர் (ரழி) அவர்கள் சொன்னார்கள்: உமர் (ரழி) அவர்கள் இந்த வசனம் இறங்கியதன் பின்னர் நபி (ஸல்) அவர்களுக்கு தெளிவாக கேட்கும் வகையில் அவருக்கு முன்னால் சத்தத்தை உயர்த்துபவராக இருக்கவில்லை.

ஆம். நிச்சயமாக ஸஹாபாக்கள், நபி (ஸல்) அவர்களுடைய தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பின்னர் பல விடயங்களில் கருத்து முரண்பாடு கொண்டார்கள். என்றாலும் அவர்களுடைய கருத்து முரண்பாடுகளுக்கு காரணம் இருந்தது. அந்த கருத்து முரண்பாடுகளை அணுகுவதற்கு பல ஒழுக்க நெறிகளை அவர்கள் பின்பற்றினார்கள். ஸஹாபாக்கள் கருத்து முரண்பாடு கொண்டது போல தாபியீன்களும் அவர்களுக்கு பின்னால் வந்தவர்களும் கருத்து முரண்பட்டார்கள். அவர்கள் அனைவரினதும் கருத்து முரண்பாடுகள் மனோ இச்சையின் காரணமாகவோ அல்லது பிடிவாத குணம் கொண்டோ அல்லது கருத்து முரண்பாடு கொள்ள வேண்டும் என்ற ஆசையினாலோ ஏற்படவில்லை. இதனால் அவர்கள் அனைவரும் நேர்வழியில் இருந்தார்கள் அவற்றுக்கான உதாரணங்களும் அவற்றை எடுத்துக்காட்டுகின்ற விடயங்களும் அதிகமாகவே உள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

நபி (ஸல்) அவர்களுடைய மரணத்தின் பின்னர் முஸ்லிம்களுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வது யார் என்பதில் கருத்து முரண்பாடு நிலவியது.

ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் போராடுவதில் கருத்து முரண்பாடு நிலவியது.

மதம் மாறியவர்களுடனான போராட்டத்தின் போது பிடிக்கப்பட்டவர்கள் விடயத்தில் கருத்து முரண்பாடு நிலவியது. அது போன்று வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசங்களில் கிடைத்த கனீமத் பொருட்களை பங்கிடுவதில் கருத்து முரண்பாடு தோன்றியது. அது போன்று வாரிசுரிமைச் சட்டத்தின் சில பகுதிகளில் ஸஹாபாக்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு நிலவியது.

மேலும், தலாகுடைய விடயம், அடிமையை உரிமையிடுதல், திருமண விடயங்கள் அது போன்று இபாதத், கொடுக்கல் வாங்கல், தண்டனைகள் போன்ற இன்னோரன்ன பல விடயங்களிலே மார்க்கத்தினுடைய கிளை அம்சங்களில் அவர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் இருந்தன. ஸஹாபாக்களுக்கு மத்தியில், தாபியீன்களுக்கு மத்தியில், மத்ஹபுக்குரிய இமாம்களுக்கு மத்தியில் இருந்த கருத்து முரண்பாடுகளை தொகுக்க முயற்சித்தால் அவர்களுடைய மத்ஹப்புகளை அடுத்தவர்களுக்கு பரப்புவதில் மேற்கொள்ளப் பட்டவற்றை நாங்கள் தொகுக்க முயற்சித்தால் நிச்சயமாக அது எங்களால் முடியாத காரியமாகும்.

இங்கு நாம் அவ்வாறான விடயங்களை தொகுப்பதற்கு பதிலாக அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் கையாண்ட ஒழுக்க நெறிகள், நடந்து கொண்ட விதங்களை இங்கு சுட்டி காட்டுவதே எமது நோக்கமாகும். அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பெரும் பிரச்சனைகள், பெரும் நிகழ்வுகள் எதுவும் அவர்களில் சிறப்புக்குரியவர்களின் சிறப்பையோ, பெரும்

அந்தஸ்துக்குரியவரின் அந்தஸ்தையோ குறைப்பதாக இருக்கவில்லை. மற்றும் அவர்களுடைய சிறப்புகளிலும் அது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

கருத்து முரண்பாடுகளின் போது பெரும் பிரச்சனைகள் அவர்களுக்கு மத்தியில் தோன்றினாலும், அவர்கள் தங்களுக்கு மத்தியில் ஒருவருடைய சிறப்பை குறைத்து மதிப்பிடுவதற்கோ, அந்தஸ்த்தை மதிப்பிடுவதற்கோ அவற்றைப் பயன்படுத்தவில்லை. கருத்து முரண்பாடுகளின் போது அவர்களுடைய ஒழுக்கங்களும், நடைமுறைகளும் இவ்வாறே இருந்தன. ஆனால், தற்காலத்தில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகளின் போது கருத்து முரண்பாடு கொள்பவர்களை மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்களாகவும் ஜமாஅத்தை விட்டு பிரிந்தவர்களாகவும் விமர்சிப்பதற்கு மிக வேகமாக பலர் தொழிற்படுகின்றனர்.

மார்க்கத்தினுடைய சட்ட விதிகள், தீர்ப்பினுடைய அடிப்படைகள் கருத்து முரண்பாடுகளின் போது இமாம்கள் பின்பற்றிய நடைமுறைகளை கவனிக்காது அவற்றின் பக்கம் மீளாது அவசர அவசரமாக இவ்வாறான தீர்ப்புகளை அவர்கள் வழங்குவதற்கான காரணங்கள் என்ன? எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இந்த விடயத்தில் மிக எச்சரிக்கையாக இருப்பதும் சமூகத்தினுடைய ஒற்றுமையை பாதுகாப்பதற்கு முயற்சிப்பதும் அவசியமாகும். மனிதர்கள் தவறுகளிலிருந்தும் பாவங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அடுத்தவர்களுடைய சிறிய தவறுகளைக் கூட பெரும் தவறுகளாக சித்தரித்து அவர்களுடைய தலைகளையே உடைத்து விடுகின்ற அளவுக்கு ஆக்க வேண்டிய தேவையும் கிடையாது. நாமும் அவர்களும் அல்லாஹ்வுனுடைய பாவமன்னிப்பின்பால் அதிகம் தேவையுடையவர்களாக இருக்கின்றோம்.

ஆகவே, மிக முக்கியமானவர்களுடன் முரண்பட்டுக் கொள்வதையும், முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதும் இக்காலத்தில் மனிதர்களுக்கு மத்தியிலுள்ள உறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடிய மோசமான நடத்தைகளைத் தவிர்த்துக்கொள்வதும் ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமையாகும்.

இமாம் ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: சமூகத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு இமாமும் நபி (ஸல்) அவர்களுடைய சுன்னாக்களில் எந்த ஒரு விடயத்திலும்: மறைவான வெளிப்படையான எந்த ஒரு விடயத்திலும் வேண்டுமென்று முரண்படுபவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் உறுதியான அடிப்படையில் நபி (ஸல்) அவர்களுடைய சுன்னாக்களை பின்பற்றுவது அவசியம் என்பதில் கருத்தொற்றுமைப்பட்டுள்ளார்கள். மனிதர்கள் ஒவ்வொருவர் மீதும் நபி (ஸல்) அவர்களுடைய கூற்றுக்களை எடுப்பதும் அவைகளுக்கு முரண்படும் கூற்றுக்களை தவிர்ந்து கொள்வது அவசியம் என்பதிலும் உடன்பட்டுள்ளனர.

என்றாலும், அவர்களில் ஒருவருடைய கூற்றுக்கு முரணாக ஒரு பலமான செய்தி வந்திருக்குமாயின் அந்த செய்தியை அவர் விட்டதற்கான காரணம்: நபி (ஸல்) அவர்கள் இதை சொன்னார்கள் என்று அவர் நம்பாதது இருந்திருக்கலாம். அல்லது நபி (ஸல்) அவர்களுடைய அந்த கூற்று குறித்த விடயத்துடன் தொடர்புபடவில்லை என்று அவர் நம்பியிருக்கலாம். அல்லது நபி (ஸல்) அவர்களுடைய அந்த சட்டம் மாற்றப்பட்டது என்ற நம்பிக்கை அவருக்கு இருந்திருக்கக் கூடும். இவ்வாறு காரணங்களை குறிப்பிடுவதனூடாக குறித்த இமாமினுடைய புகழை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

ஒற்றுமையும் விரிசல்களை தவிர்ந்து கொள்வதுமே அல்லாஹ்வின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான வழியாகும்.

முஸ்லிம் நாடுகளில் நடைபெறுகின்ற பிளவுகள், முரண்பாடுகள், இரத்தக் களரிகளை ஏற்படுத்துகின்ற அளவுக்கு வந்துவிட்ட போராட்டங்கள், உயிர்களை போக்குதல், சொத்துக்களை அழித்தல், தங்களை பாதுகாத்துக் கொள்ளாத போராட்டங்கள் பற்றியெல்லாம் நாங்கள் சிந்தித்தால் உள்ளம் அங்கீகரிக்காத, எந்த மனிதனுடைய புத்தியும் சிந்தனையும் ஏற்றுக்கொள்ளாத சில நாடுகளில் நடக்கின்ற இவ்வாறான விவகாரங்கள் நிச்சயமாக இஸ்லாத்தினுடைய எதிரிகள் இரவில் எங்களுக்கு எதிராக திட்டமிடுகிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்வோம். குறிப்பாக சபிக்கப்பட்ட மூன்று பெரும் சர்சைகளான கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் மார்க்சிஸ வாதிகள் தங்களுக்குள் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்கள் அதுபோன்று பித்அத்வாதிகளும் இஸ்லாத்திற்கு எதிரான, சிந்தனையால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களில் ஈடுபடுகின்றவர்களும் மிக ஒருங்கிணைப்போடு தங்களுக்கு மத்தியில் அதிகமான முரண்பாடுகள் பிளவுகள் இருந்த போதிலும் ஆச்சரியப் படத்தக்க உடன்பாட்டுடன் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய முடியும்.

ஆம் நிச்சயமாக அவர்கள் ஒரே திசையில் இருந்து நகருகிறார்கள். ஒரே நோக்கத்தை நோக்கி பயணிக்கிறார்கள். இஸ்லாத்தை அழிக்க வேண்டும் அதனுடைய போதனைகளை இல்லாதொழிக்க

வேண்டும் என்ற ஒரே இலக்கை நோக்கி நகர்கிறார்கள். அப்படி என்றால் முஸ்லிம்களாகிய நாங்கள் இந்த படுமோசமான போராட்டத்திற்கு முன்னால் எங்களுக்கு எதிராக முப்பெரும் சக்திகள் ஒன்றிணைந்து நடத்துகின்ற இந்த போரில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? மிக பயங்கரமான முடிவுகளை, விளைவுகளை, ஏற்படுத்துகின்ற இந்த போராட்டங்களுக்கு முன்னால் சக்தி இல்லாதவர்களாக, இந்த அபாயத்தை அறிந்தும் அதை தடுக்க முடியாதவர்களாக, பிரச்சனைகளை எங்களுக்கு மத்தியில் வளர்த்து பெரிதாகி மிகப்பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் வரை விட்டு வைப்பதா? எங்களுடைய மார்க்கத்தையும் எங்களுடைய இருப்பையும் எங்களுடைய வளங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

பழைய முரண்பாடுகளை தீர்த்துக்கொண்டு புதிய உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு இஸ்லாத்தினுடைய எதிரிகள் குறிப்பாக முஸ்லிம்களாகிய எங்களுடைய எதிரிகள் எங்களுக்கு எதிராக மிகப்பெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஒன்றிணைந்து இருக்கிறார்கள் என்பது எந்த விவாதங்களும் இல்லாமல் சந்தேகங்களும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு விடயமாகும்.

அத்தோடு மிகவும் சிரமமான இந்த செயலை இஸ்லாத்தினுடைய எதிரிகளாகிய அவர்கள் செய்யவில்லை என்றால் நிச்சயமாக எதிர் காலத்தினுடைய கதவுகள் இஸ்லாத்திற்காக திறக்கும். 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் எப்படி அது வீறு நடை போட்டதோ அது போன்று அந்த ஆரம்ப காலத்தைப் போன்று ஏனைய நாடுகளை அது வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருப்பதினால் அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

ஒன்றிணைந்து இருக்கிறார்கள் என்பது எந்த சந்தேகமும் இல்லாமல் எங்களுக்கு தெளிவானால் இங்கு தான் எங்களுடைய பொறுப்பின் கனத்தையும் அதனுடைய முக்கியத்துவமும் அதன் அபாயமும் எங்களுக்கு தெளிவாக வேண்டும். எனவே, இங்கு எங்களுக்கு எதிராக நாடப்படுகின்ற விடயங்களை எதிர்கொள்வதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது அவசியமானதாகும். எங்களுக்கு எதிராகவும் எங்களுடைய நிலபுலங்களுக்கு எதிராகவும் ஒவ்வொரு இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களை எதிர் கொள்வதற்கு நாம் என்ன செய்வது என்பது மிக அவசியமாக சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆரம்பமாக எங்களுக்கு எதிராக இருக்கின்ற இவ்வாறான பெரும் அபாயங்களையும், அபாயம் நிறைந்த சவால்களையும், மிகத் திட்டமிடப்பட்ட சூழ்ச்சிகளையும் இஸ்லாத்தினுடைய எதிரிகள் இஸ்லாமிய பிரச்சாரத்தினுடைய இந்த கொடியை சுமந்திருக்கின்ற இறை விசுவாசிகளை தீர்த்து கட்டுவதற்காக தயாரித்திருக்கின்ற திட்டங்களையும் நாங்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். என்னுடைய சிந்தனையின்படி எங்களுடைய வெற்றிக்கான வழியும் அல்லாஹ்வினுடைய உதவிக்கான வழியும் பின்வரும் விடயங்களை பின்பற்றுவதிலேயே தங்கி இருக்கின்றது.

I. அல்குர்ஆன் சுன்னாவை பின்பற்றுதல்:

உறுதி, நிலைத்திருத்தல் மற்றும் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கான வினைத்திறன் மிக்க அடிப்படையாகவும், இயங்குதளமாகவும் இதுவே அமைந்திருக்கின்றது.

ஆம் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவுமே நேரான வழியாகும். அதுவே, பாதுகாப்பு மற்றும் வெற்றியுமாகும். அவற்றை கொண்டே அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் காலாகாலமாக பரம்பரை பரம்பரையாக அடுத்தவர்களை விட்டும் வேறுபட்டுள்ளார்கள். அவர்களுடைய இரட்சகனுடைய குர்ஆனை பின்பற்றுவதும் நபி (ஸல்) அவர்களுடைய சுன்னாவை பின்பற்றுவதும் ஸஹாபாக்களில் இருந்தும் தாபியீன்களில் இருந்தும் உள்ள அவர்களின் முன்னோர்களினுடைய இஜ்மாவான கருத்துக்களை பின்பற்றுவதும் பிளவுகளிலிருந்தும், கருத்து முரண்பாடுகளிலிருந்தும், சிந்தனை குழப்பங்களிலிருந்தும், மனோ இச்சைகளின் காரணமாக முரண்பாடுகளை உருவாக்கிக் கொள்வதிலிருந்தும் அவர்களை பாதுகாக்க கூடியதாக இருந்தது.

அல்லாஹ் சொல்கிறான்: ''அல்லாஹ்வினுடைய கயிற்றை அனைவருமாக சேர்ந்து பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் பிரிந்து விடாதீர்கள்'' ஸைத் இப்னு அர்கம் (ரழி) அவர்கள் சொல்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "நான் உங்களை இரண்டு விடயங்களில் விட்டுச் செல்கிறேன் அதனை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளும் காலமெல்லாம் வழிதவற மாட்டீர்கள் அல்லாஹ்வினுடைய வேதமும் என்னுடைய வழிமுறையுமாகும்.'' (ஹாக்கிம்)

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "என்னுடைய வழிமுறையையும் நேர்வழி பெற்ற நீதமான எனக்கு பின்னால் வரக்கூடிய ஆட்சியாளர்களுடைய வழிமுறையையும் உங்களுக்கு நான் உபதேசிக்கின்றேன் அவற்றை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய கடவாய் பற்களினால் அவற்றை கவ்வி பிடித்துக் கொள்ளுங்கள்.''

ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: “ஒரு முஸ்லிமுக்கு நபி (ஸல்) அவர்களுடைய சுன்னாவையும் முஹாஜிர்கள் அன்சார்களிலிருந்தும் முந்தியவர்கள் முன்னோர்கள் மற்றும் நேர்வழி பெற்ற கலிபாக்களினுடைய சுன்னாவையும், அவர்களுக்கு பின்னால் நல்ல முறையில் அவர்களை பின்பற்றியவர்களுடைய சுன்னாக்களையும், பின்பற்றுவது அவசியமாகும். அந்த சமூகம் எதில் முரண்பட்டதோ எதில் பிரிந்ததோ அவற்றை அறிவின் மூலமும் நீதமாகவும் தீர்த்துக் கொள்ள அவனால் முடியுமாக இருந்தால் அவ்வாறு தீர்த்துக் கொள்ள வேண்டும். சரியானதை பின்பற்ற வேண்டும் அவ்வாறில்லை என்றால் குர்ஆன், சுன்னாவினுடைய ஆதாரத்தை கொண்டும் இஜ்மாவை கொண்டும் உறுதியானவற்றை பின்பற்றுவதை தவிர வேறு வழயில்லை.

மேலும் தங்களுடைய மார்க்கத்தை பிரித்து பல கூட்டங்களாக ஆகிவிட்டவர்களை நீர் புறக்கணிப்பாயாக. ஏனெனில் அவர்களுடைய முரண்பாடுகள், பிளவுகள் அனைத்தும் மனோ இச்சையை பின்பற்றுவதினால் உருவாகின்றது. அவர்களுடைய உள்ளங்கள் எதனை வேண்டி நிற்கின்றதோ அதை அவர்கள் பின்பற்றுகிறார்கள். ஆனால், அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நேரான வழி சத்தியம் வந்துள்ளது.

ஆதாரங்கள் மற்றும் இஜ்மாவின் ஊடாக உறுதியானதை பின்பற்றுமாறு பொதுமக்களை ஏவுவதே கடமையாகும். அவர்களுக்கு மத்தியில் பிளவுகளையும் கருத்து முரண்பாடுகளையும் உருவாக்கக்கூடிய மேலதிக விளக்கங்களில் அவர்கள் நுழைவதை விட்டும் தடுப்பது அவசியமாகும். ஏனெனில் பிரிவினையும் முரண்பாடுகளும் அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்)

அவர்களும் தடுத்த விடயங்களாகும். ஸஹாபாக்கள் தாபியீன்கள் மற்றும் அவர்களுக்கு பின்னால் வந்தவர்களில் உள்ள உலமாக்கள் அவர்களுக்கு மத்தியில் ஒரு விடயத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டால் அல்லாஹ்வினுடைய கட்டளையை பின்பற்றினார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்: "நீங்கள் ஒரு விடயத்தில் கருத்து முரண்பட்டால் அல்லாஹ்வின் பாலும் அல்லாஹ்வினுடைய தூதரின் பாலும் மீட்டுங்கள். அல்லாஹ்வைக் கொண்டும் மறுமை நாளைக் கொண்டும் நீங்கள் ஈமான் கொண்டவர்களாக இருந்தால் அதுதான் உங்களுக்கு நல்லதும் சிறந்ததுமாகும்." அவர்கள் செயல் ரீதியான மற்றும் அறிவு ரீதியான விடயங்களில் ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறிக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அதே நேரம் அவர்களுக்கு மத்தியில் சகோதரத்துவமும் பாதுகாப்பும் மார்க்க ரீதியான ஒற்றுமையும் இருந்தது. மார்க்க ரீதியான சகோதரத்துவம் பாதுகாப்பு மற்றும் ஒற்றுமை அவர்களுக்கு மத்தியில் இருக்கும் நிலையில் அவர்கள் செயல் ரீதியான மற்றும் அறிவியல் ரீதியான விடயங்களிலே ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ii. சகோதரத்துவ வாஞ்ஞையை உருவாக்குதலும் அணிகளை ஒற்றுமைப்படுத்துதலும்.

முஸ்லிம்களை பிரிக்காத, ஒற்றுமைப்படுத்துகின்ற சரியான கொள்கை அறிவை அவர்களுக்கு மத்தியில் பரப்புவதாகும் அதனூடாகவே இது சாத்தியமாகும். அது அவர்களை ஒற்றுமைப்படுத்தும் அவர்களை சிதைக்காது. அதுதான் நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களை ஒன்றிணைத்த நமது

முன்னோர்களின் அகீதாவாகும். மேலும் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அதைக் கற்பித்தார்கள். இஸ்லாமிய மார்க்கத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய இடத்தில் நபி (ஸல்) அவர்கள் வைத்தார்கள். அதுவே, எங்களுடைய சமூகத்தின் ஆண்கள் மற்றும் பெண்களிலே முழுமையான பண்பாட்டை உருவாக்குகின்றது. எங்களுடைய விளக்கங்களை அது சீர் செய்கின்றது, சகோதரத்துவம், விட்டுக்கொடுப்பு, அடுத்தவர்களுக்கு உதவுதல், இஸ்லாமிய ரீதியான செயல் திறன் மிக்க அடிப்படைகளில் எங்களுக்கு மத்தியில் உள்ள உறவை மீண்டும் பலப்படுத்துவதாக அதுவே அமையும்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: "இந்த சமூகத்தில் இறுதியானவர் இந்த சமூகத்தில் ஆரம்பத்தில் வந்தவர்கள் எதைக் கொண்டு சீர் பெற்றார்களோ அதைக் கொண்டே அன்றி வேறு எதனாலும் சீர் பெற முடியாது." இதை விட மிகவும் தெளிவான ஒன்றாக அவருடைய சமூகத்திற்கு முன்பு இருந்த சமூகம் பிரிந்ததைப் போலவே தன்னுடைய சமூகமும் 73 குழுக்களாக பிரியும் என நபி (ஸல்) அவர்கள் சொன்ன ஹதீஸ் உள்ளது. நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "அவர்கள் அனைவரும் நரகத்திற்கு செல்வார்கள் ஒரே ஒரு குழுவை தவிர" அக்குழு யார் அல்லாஹ்வின் தூதரே! என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள்: "நானும் எனது தோழர்களும் எதிலிருந்தேமோ அதில் இருக்கின்ற குழு" என்று சொன்னார்கள்.

iii. இஸ்லாமிய சமூகம் தங்களின் மார்க்க விடயங்களில் நம்புகின்ற: அறிவும் அமானிதமும் குர்ஆன் ஸுன்னாவை மனனமிடுவதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் தங்களின்

காலத்தை செலவிட்ட நேர்வழி பெற்ற இமாம்கள், அறிஞர்களோடு இணக்கமாக இருத்தல் வேண்டும். எப்போதும் அவர்களைப் பிரியாதிருத்தல் வேண்டும். மேலும், அவர்களை விட தங்களை உயர்த்திப் பேசுவதையும் அவர்களுக்கு முரண்படுவதை விட்டும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லது பிரிவினை மற்றும் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்ற உதிரியான எந்த விடயங்களோடும் தொடர்பில்லாதவர்களாக இருத்தல் வேண்டும். இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையை பாதுகாப்பதற்கு மிக முக்கியமான பாதுகாவலர்களாக உலமாக்களே இருக்கிறார்கள். அதற்கான உத்தரவாதமாகவும் உலமாக்களே இருக்கிறார்கள். அல்லாஹ் சொல்கிறான்: “நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேளுங்கள்.’’

iv. நிச்சயமாக மாறு செய்வதாலோ அல்லது மடமையினாலோ அல்லது நிரபராதிகள் மீது எல்லை மீறுவதினாலோ முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது.

நன்மைகளில் ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல், இறையச்சத்தில் ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல், முரண்படுபவருக்கு நியாயங்களைத் தேடுதல், குறிப்பாக அவர் நியாயப்படுத்துவதற்கும், ஆய்விற்கும் இஜ்திஹாதிற்கும் தகுதியானவரா இருந்தால் அவருக்கான நியாயங்களைத் தேடுவது அவசியமாகும். இவற்றினால்தான் முரண்பாடுகளை தீர்க்க முடியும். மேலும், அடுத்தவரிடம் தவறு, குறை இருப்பதை உணறுபவர், அவருக்கு வழி காட்டுவதும், ஆலோசனை சொல்வதும், அவருக்கு உபதேசம் செய்வதும் கடமையாகும். அவருடன் கடுமையாக நடக்கவோ, அவரை மடையன் என விமர்சிக்கவோ அவரை நோவினை செய்வதோ கூடாது. அவ்வாறு உபதேசம் செய்தும் அவர் ஏற்க்கவில்லை

என்றால் எந்தவொரு ஆத்மாவையும் அல்லாஹ் அதன் சக்தியை மீறி பொறுப்புக்களை சுமத்துவதில்லை. இதுவே அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் கொள்கையாகும். நிச்சயமாக ஒவ்வொரு முஸ்லிமும் நலவை விரும்ப வேண்டும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே தொடர்ச்சியாக செயற்படுவார்கள். தவறிழைத்தவர்களின் தவறுகளை மன்னித்தல், அவர்களைக் கடந்து செல்லல், மேலும் தீங்கிழைத்தவனுடைய தீங்கை கடந்து செல்லல், சரியானதின்பால் அவனை அழைத்தல், அவனுக்கு அல்லாஹ் வழிகாட்டவும், மன்னிக்கவும் பிராத்தித்தல் இவைதான் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅதினரின் கொள்கையாகும்.

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: உள்ளங்களை ஒன்றிணைப்பதும், முரண்பாகளை சீர் செய்வதும், முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப் படுத்துவதுமே மார்க்கதின் மிக முக்கியமான அடிப்படையாகும். அல்லாஹ் சொல்கிறான்: “அல்லாஹ்வை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள். உங்களுக்கு மத்தியில் சீர்திருத்தத்தை, சமாதானத்தை உருவாக்குங்கள்” இதுபோன்று ஒற்றுமையை தூண்டக்கூடிய, சகோதரத்துவத்தை வலியுறுத்தக் கூடிய ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அவைகள் பிரிவினையையும் முரண்பாடுகளையும் தடுக்கின்றன.

நிச்சயமாக நான் முஸ்லிம்களில் எவரையும் நோவினை செய்ய விரும்பவில்லை. நிச்சயமக நான் முஸ்லிம்களில் எவருக்கும் ஒரு விடயத்திலும் உள்ளார்ந்த அடிப்படையிலோ, வெளிப் படையாகவோ அநியாயம் செய்ய விரும்பமாட்டேன். ஏனெனில், நிச்சயமாக ஒரு மனிதன் சரியானதை அடைந்து கொண்ட ஒரு முஜ்தஹிதாக அல்லது தவறிழைத்தவனாக அல்லது பாவம்

செய்தவனாகவே இருப்பான். முதலாமவரை பொறுத்தவரை அதாவது, முஜ்தஹிதாக சரியானதை அடைந்து கொண்டவரை பொருத்தவரை: கூலி கொடுக்கப்பட்டவரும் நன்றி கூறப்பட வேண்டியவருமாவார். இரண்டாமவரைப் பொறுத்தவரை: அவருடைய இஜ்திஹாதிற்காக கூலி கொடுக்கப்பட்டதோடு மன்னிக்கப் பட்டவருமாகும், அவருடைய தவறு மன்னிக்கப்பட்டதாகும். மூன்றாமவரைப் பொறுத்தவரை: அல்லாஹ் எமக்கும் அவருக்கும் ஏனைய மு.்.மின்களுக்கும் பாவ மன்னிப்பை வழங்குவானாக.

உங்களுக்குத் தெரியும் நிச்சயமாக நாங்கள் நன்மையான விடயங்கள் தக்வாவுடைய விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கின்றோம். நன்மையான விடயங்களில் எங்களில் சிலர் சிலருக்கு உதவி செய்வது அவசியமானதாகும். சமூகத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரிவினை: உலமாக்கள், அறிஞர்கள், முக்கியஸ்தர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரிவினைதான் எங்கள் மீது எதிரிகளை அடர்ந்தேற வைத்துள்ளது. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபடுவதை விட்டதன் விளைவாகவே அவர்களுக்கிடையில் பிரிவினைகள் தோற்றம் பெற்றது. அல்லாஹ் ஏவியதில் சிலதை மக்கள் எப்போது விட்டார்களோ அப்போது அவர்களுக்கு மத்தியில் குரோதமும் எதிர்ப்புணர்வுகளும் உருவாகிவிட்டது. சமூகம் பிரிந்து விட்டால்! சீர் கெட்டு அழிந்து போவார்கள். ஒற்றுமைப் பட்டால் சீருற்று உலகத்தையே ஆழ்வார்கள். நிச்சயமாக ஒற்றுமை அருளாகும் பிரிவு வேதனையாகும்.

அல் அகீதா தஹாவிய்யா என்ற பிரபல்யமான நூலினுடைய ஆசிரியர் இமாம் அபூ ஜ.்.பர் அத்தஹாவி (ரஹ்) அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருடைய கொள்கை

தொடர்பாக விளக்கும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: "நிச்சயமாக நாம் கூட்டமைப்பாக இருப்பதை சத்தியமாகவும் சரியானதாகவும் காண்கின்றோம் பிரிவினை வழிகேடும், தண்டனையுமாகும்."

v. ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்க வேண்டும், விரண்டோடுதல் கூடாது. ஒருவருக்கொருவர் உடன்பாட்டோடு இருக்க வேண்டும் முரண்பாடு கூடாது. ஒருவருக்கொருவர் உறவோடிருக்க வேண்டும் துண்டித்து வாழக் கூடாது. இதுவே, மனிதர்களுக்கு மத்தியில் உள்ள உறவினுடைய அடிப்படைகளாகும். அல்லாஹ் சொல்கிறான்: "மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். உங்களை கோத்திரங்களாகவும் குழுக்களாகவும் ஆக்கியது நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வதற்கே ஆகும்." (49:13)

இந்த அறிமுகத்தை உருவாக்கும் ஒவ்வொரு உறவும் மேலும் அதை ஒழிக்க கூடியதை இல்லாமல் செய்யும் ஒவ்வொரு தொடர்பும் கட்டாயம் ஊக்குவிக்கப்பட வேண்டியதாகும். அதனுடைய விஷேட தன்மைகளைக் கொண்டு முஸ்லிம்கள் உயிர்த்தெழுவதற்காக பயன்பெறுவது அவசியமாகும். முஸ்லிம்கள் ஒரு வித்திலிருந்து பிறந்த கிளைகளைப் போன்றவர் களாகும். அதனால், முஸ்லிம் இளைஞர்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துகின்ற வழிகளை தடுப்பதற்காக கலப்படமற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், முஸ்லிம்களுக்கு மத்தியில் தற்போது பிளவுகள் முரண்பாடுகள் தோன்றி இருப்பது மிகவும் ஆபத்தான கவலையை ஏற்படுத்துவதாகும். நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல

முஸ்லிம்களுடைய எதிரிகள் முஸ்லிம்களை பலவீனப்படுத்த ஏற்கனவே பல தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை பல குழுக்களாக பிரித்ததற்கு பிறகு ஒரே அடியாக வீழ்த்துவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் முஸ்லிம்கள் பிழவுற்றிருப்பது மிகவும் ஆபத்தானதாகும்.

எனவே, இஸ்லாமிய சகோதரர்களே! நன்மையான விடயங்களிலும் அல்லாஹ்வை அஞ்சி வாழக்கூடிய விடயங்களிலும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்போம். தீமையான, பிரிவினையை உருவாக்கக்கூடிய விடயங்களில் உதவி செய்யாதிருப்போம். நல்லவற்றின் அழைப்பாளர்களாக, சீர்திருத்தத்தை நோக்கிய அழைப்பாளர்களாக இருப்போம். இஸ்லாம் சொல்லுகின்ற கருத்துக்களை எங்களிடமும், எங்களுடைய குடும்பத்திலும், உறவினர்களுக்கிடையிலும், சமூகத்திலும், நாட்டிலும் யதார்த்தப்படுத்துகின்றவர்ளாக இருப்போம்.

எங்களுக்கு மத்தியில் பாதுகாப்பும் நம்பிக்கையும் தலைத்தோங்க அடுத்தவர்களை கௌரவிக்கவும் மதிக்கவும் கற்றுக் கொள்வோம். இதனால், எங்களுக்கு மத்தியில் அமைதியும் சந்தோசமும் ஏற்படும்.. எங்களின் விவகாரங்கள் ஒற்றுமைப்படும். எங்களுடைய அணிகள் ஒன்றாகும். நாங்கள் பிரிந்து கிடப்பதை ஒற்றுமைப்படுத்தலாம் எங்களுடைய குழுக்களை நாங்கள் ஒன்றிணைக்கலாம். எங்களின் கருத்துக்களை ஒற்றுமைப் படுத்தலாம். எனவே, எமது இஸ்லாத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக எங்களுக்கு மத்தியில் ஒற்றுமைப்படுவோம்.

முரண்பாடுகளை கையாளுவதற்கான செயன் முறைகள்.

மனிதர்களுக்கு மத்தியில் அறிவு, விளக்கத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளின் விளைவாக ஏற்படும் முரண்பாடுகள் அல்லாஹ்வின் வழிமுறைகளில் ஒன்றாகும். அதனால், அவற்றைக் கையாளுவதற்கான செயல் சார்ந்த நடத்தைகளை தெளிவு படுத்துவது அவசியமாகும். எனவே, கருத்து முரண்பாடுகளின் போது கட்டாயம் கவனிக்க வேண்டிய நடவடிக்கைகள் சிலதை தெளிவுபடுத்த முயற்சிக்கின்றேன்.

கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்ற நேரம் குறிப்பாக முரண்பாட்டுக்குரிய விடயத்தினை மார்க்க ரீதியான ஆதாரங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து விளங்க முற்படுவது, ஆய்வு செய்வது அவசியமாகும். ஆதாரங்களை தனித்தனியாக ஆய்வு செய்யாமல் முழுமையாக ஒன்றிணைத்து விளங்குதல் வேண்டும். இதன் மூலம் முரண்பாட்டின் எல்லைகள் வரையறுக்கப்படுவதுடன் அதிலுள்ள விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டு பின்னர் அதனோடு அதனை கையாளுகின்ற முறையும் தீர்மானிக்கப்படும்.

மார்க்கத்தில் கட்டாயம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய தெரிந்திருக்க வேண்டிய ஒரு விடயத்திலே கருத்து முரண்பாடு ஏற்படுமாயின் அதில் பின்வரும் விடயங்கள் அவசியமாகும்.

1. குறித்த பிரச்சனையில் உள்ள விடயங்களை தெளிவான மற்றும் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு தெளிவுபடுத்துதல் அவசியமாகும். முரண்படுபவரை தாக்குகின்ற முறையில் விளக்கத்தை அமைத்துக் கொள்வது கூடாது. முரண்படுபவர்

தன்னுடைய தவறிலிருந்து மீள்வதற்கான ஒரு வழியை விளக்கத்தின் போது விட்டுவிடுதல் அவசியமாகும். உளரீதியான எந்த நெருக்கடிகளையும் அவர் அடைந்து கொள்ளாது தான் விரும்புகின்ற நேரம் தவறிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு வழியை அவருக்கு விட்டு விடுதல் அவசியமாகும். ஏனெனில், மனிதனுடைய உள்ளம் எப்போதும் பூரணத்துவத்தை விரும்புவதாகும். தவறை அதனால் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக மனிதன் கூட்டத்திற்கு மத்தியில் தவறை ஏற்றுக் கொள்வது முடியாத காரியமாகும். அதனால், முரண்படுபவருக்கு சத்தியத்தை தெளிவுபடுத்துகின்றபோது முரண்படுபவரை அடையாளப்படுத்தாமல் பொதுவாக குறித்த விடயத்தில் சத்தியத்தை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களுக்கு யாராவது ஒரு மனிதனைப் பற்றி ஏதாவது ஒரு விடயம் தெரிந்தால், “இன்னாருக்கு என்ன நடந்தது என்று நபி (ஸல்) அவர்கள் சொல்லமாட்டார்கள். மாறாக, இந்தக் கூட்டத்தினருக்கு என்ன நடந்தது அவர்கள் இவ்வாறு இவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்று சொல்வார்கள்.”

அதுபோன்றுதான், முஆவியா பின் ஜாஹிமா அஸ்ஸலமி அவர்கள் தொழுகையில் கதைத்த போது நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலும் அமைந்திருந்தது.

முஆவியா (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: என்னுடைய தந்தையும் தாயும் அர்ப்பணமாகட்டும் அவருக்கு முன்னர் அவர் போன்ற ஒரு ஆசிரியரை நான் கண்டதுமில்லை. அவருக்குப் பிறகும் அவரைப் போன்று சிறந்த அடிப்படையில் கற்பிக்கின்ற

எவரையும் நான் கண்டதில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக என்னை வெறுக்கவில்லை எனக்கு அவர் அடிக்கவுமில்லை. என்றாலும், அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: “நிச்சயமாக தொழுகையில் அடுத்த மனிதர்களுடன் பேசுவது கூடாது. தஸ்பீஹ், தக்பீர், குர்ஆன் ஓதுவதே தொழுகையில் இருத்தல் வேண்டும்.”

2. மார்க்கத்தில் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விடயங்களில் ஒன்றாக குறித்த விடயம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். ஏனெனில், ஒரு மனிதனுடைய உள்ளத்தில் ஒரு விடயம் பதிவதும், அவனுடைய சிந்தனையில் ஆழமாக வேறூன்றுவதும், அவனை அந்த விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குபவனாக ஆக்குகின்றது. பாராளுமன்றத் தேர்தலில் நுழைவது கூடாது என்று நினைக்கின்றவர்களுடைய இஜ்திஹாதும் இவ்வாரான ஒன்றுதான்.

சில வேளை ஒருவர் இதில் கடும்போக்கை கையாளுவார், குறித்த விடயம் மார்க்கத்தில் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விடயங்களில் ஒன்று என்று அவர் கருதுவார். அதனால், அதற்கு முரண்படுபவரை விரோதிப்பார் மேலும் தேர்தல்களில் ஈடுபடுவது முஸ்லிம் அல்லாதவர்களை நேசிக்கின்ற வகைகளில் ஒன்று என்றும் விவரிப்பார். ஆனால், குறித்த விடயத்தில் கருத்து முரண்பாடு இருக்கின்றது, இஜ்திஹாதிற்குரிய இந்த விடயத்தை மிக குறுகிய வட்டத்திற்குள் யோசிக்க வேண்டிய தேவையில்லை.

3. பின்னர், முரண்படுபவர் மார்க்கத்திற்குள் இருக்கின்றாரா அல்லது இந்த கருத்து முரண்பாட்டின் மூலம் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டாரா என்பதை வரையறுத்துக் கொள்ள

வேண்டும். ஏனெனில் முரண்படுபவர் நிராகரிப்பாளராகிவிட்டார். என்றால்! அவருடன் முஸ்லிம் அல்லாதவர்களுடன் தொடர்புகளை பேணுகின்ற அடிப்படையிலேயே தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிராகரிப்பாளரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தல் வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு நிராகரிப்பாளரையும் இஸ்லாத்தின் பால் அழைப்பது கடமையாகும். பொருத்தமான நேரத்தில் அவரை மட்டும் நீங்கி விடுவது அவசியமாகும்.

முரண்படுபவர், காபிராகவில்லை என்றால் அதாவது, தன்னுடைய முரண்பாட்டின் மூலம் இஸ்லாத்தை விட்டு சென்றுவிடவில்லை என்றால்: செய்திகளைத் தீர்மானிப்பதில் முரண்படுபவர்கள் நோக்கங்கள், கோரிக்கைகளில் முரண்படுபவர்கள் எல்லோரையும் இவ்வகையில் சேர்க்க முடியும். மேலும், அஷ்அரிய்யா, சைய்திய்யா போன்ற ஷியாக்களில் எல்லை மீறாத குழுவினரும், சூபிகளில் எல்லை மீறாதவர்களையும் இவ்வகையில் சேர்க்க முடியும். இவர்கள் முஸ்லிம்களாக இருப்பதன் காரணமாக அவர்களுக்கு பொதுவாக முஸ்லிம்களுக்குள்ள உரிமைகள் இருக்கின்றன.

இத்தகையவர்கள் சுன்னாவை பின்பற்றுவதற்கேற்ப அல்லது விடுவதற்கேற்ப அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு நெருக்கமானவர்கல் தூரமானவர்கல் என்பதில் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு மிக்கவர்களாக இருக்கின்றனர். அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்திலுள்ள முர்ஜிஆக்களுடனான முரண்பாடு உண்மையாக முர்ஜிஆவாக இருக்கின்றவர்களுடனுள்ள முரண்பாட்டை போன்றதல்ல. அஷ்அரியாக்களின் முரண்பாடு

எல்லை மீறுகின்ற ஜஹ்மியாக்களுடனான முரண்பாடு போன்றதன்று. இவ்வாறு ஒவ்வொன்றையும் கணித்துக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறான கருத்து முரண்பாடுடைய விடயங்கள் மார்க்கத்தில் கட்டாயம் தெரிந்து இருக்க வேண்டிய விடயமாக இருந்த போதிலும் அறிவதில் உள்ள சிக்கல் மற்றும் நிராகரிப்பு சட்டத்தை வேறு திசைகளுக்கு திருப்புகின்ற விளக்கங்கள் இருப்பதன் காரணமாக முரண்படுபவர் நிராகரித்து விட்டார் என்று சில சமயங்களில் சொல்ல முடியாது. ஏனெனில், முரண்படு பவரிடம் அடிப்படையான ஈமான் உள்ளது. குர்ஆனில் அவர் கலங்கம் கற்பிக்கவில்லை. ஹதீஸ்களில் கலங்கத்தை ஏற்படுத்தவில்லை. எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவருடன் இருக்கின்ற பித்அதோடு வழிகெட்ட முஸ்லிமாக இருப்பார். அவர் வழிகேடர், வழிதவறியவர் என்று அவருக்கு தீர்ப்பளிக்கப்படும்.

ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: "கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயம் யாதெனில், மார்க்கத்தினுடைய அடிப்படைகளிலும் கிளை அம்சங்களிலும் அடுத்தவர்களைப் பின்பற்றுகின்றவர்களைப் பொருத்தவரை பலதரப்பட்டவர்ளாக உள்ளனர். அவர்களில் சிலர் பிரதானமான அடிப்படைகளில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு முரண்பட்டவர்கள். மற்றும் சிலர் சில நுணுக்கமான விடயங்களில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு முரண்பட்டவர்கள்.

எனவே, யார் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்திற்கு மிகவும் முரண்பட்ட கூட்டத்தினராக இருக்கின்றார்களோ அவர்களுக்கு முரண்பட்டவர், அவர்களுடைய அசத்தியத்தை நிராகரித்ததற்காகவும்

அவர்களுக்கு சத்தியத்தை விளங்கப்படுத்தியதற்காகவும் புகழப்படுபவார். என்றாலும், அவர்களிடம் இருக்கின்ற சில உண்மைகளை அவர் மறுத்ததற்காக நீதத்தை மீறியவராக இருப்பார். அவர்களிடமிருந்த சில சத்தியத்தை மறுத்து சில அசத்தியத்தை கூறியதன் காரணமாக அவர்களை விமர்சிப்பதால், நீதி செலுத்தாதவராக இருப்பார். அவ்வேளை சிறிய ஒரு பித்அத்தை கொண்டு பெரும் பித்அத்தை தடுப்பவராகவும் இலகுவான ஒரு அசத்தியத்தை கொண்டு வெளிப்படையான பெரிய மார்க்க விரோதச் செயலை நிராகரிப்பவராகவும் இருப்பார்.

இதுதான், அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத்துடன் தங்களுடைய சிந்தனையை முற்படுத்தி சேர்ந்திருக்கின்ற அதிகமானவர்களின் நிலையாகும். இவர்களைப் போன்றோர் தாங்கள் உருவாக்கிய பித்அத்தை வைத்து அடுத்தவர்களை நேசித்தும் கோபித்தும் முஸ்லிம்களுடைய கூட்டமைப்பை விட்டும் பிரியாதிருப்பின் குறித்த விடயம் ஒரு தவறாக இருக்கும். இது போன்ற சந்தர்ப்பங்களில் அல்லாஹ் இறை விசுவாசிகளின் தவறுகளை மன்னிக்க போதுமானவனாக இருக்கின்றான்.

இதுபோன்ற விடயங்களில் முன்னோர்களில் அதிகமானவர்களும், இஸ்லாமிய சமூகத்தின் அறிஞர்கள் பலரும் விழ்ந்துள்ளனர். அவர்கள் இஜ்திஹாதின்படி பல விடயங்களை குறிப்பிட்டுள்ளார்கள். அது குர்ஆன், சுன்னாவிற்கு முரண்படுகின்றது. இத்தகையோரை, தங்களின் பித்அத்திற்கு உடன்படுவோரை நேசித்தும் உடன்படாதவர்களை எதிர்த்தும் முஸ்லிம் சமூகத்தைப் பிரிக்கின்றவர்களுடன் சேர்க்க முடியாது. இவர்கள், இஜ்திஹாதுடைய விடயங்களில் தன்னுடைய கருத்துக்கு உடன்படாது முரண்படுவோரை பாவியாகவும் காபிர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

தங்களுக்கு உடண்படாது முரண்படுகின்ற வர்களுடன் போராடுவதை ஹலாலாக்கினர். இவர்களே, பிரிவினைவாதிகள், குழப்பவாதிகள்.

01. ஒரு மனிதன் தன்னுடைய உள்ளத்திற்கு சரியானது என்று எண்ணும் போதும், அடுத்தவர்களை பிரிந்து இருப்பதற்கான அளவுகோலாக ஒன்றை எண்ணும் போது மறைவான மனோ இச்சை அவனுக்கும் சத்தியத்திற்கும் இடையே வந்துவிடுகின்றது. (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்) இதுதான் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தன்னைப் பற்றி குறிப்பிட்ட விடயம். அவர்கள் சொல்கிறார்கள்: "நிச்சயமாக அவர் எந்தவொரு மனிதனோடு விவாதித்தாலும் அல்லாஹ் அவனுடைய நாவிலே சத்தியத்தை வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற ஆசை இல்லாமல் அவர் விவாதித்ததில்லை." இமாமவர்களின் நாவிலே சத்தியம் வெளிப்பட வேண்டும் என்பது அவர்களின் இலக்காக இருக்கவில்லை. மாறாக, தனக்கு முரண்படுபவராக இருந்தாலும் அவருடைய நாவில் இருந்தே சத்தியம் வெளிவர வேண்டும் என்ற இலக்குடன் இருந்தார்கள். இது அவருடைய உயர்ந்த இலட்சியமாகவும், தூய்மையான உள்ளத்துக்குரிய எடுத்துக்காட்டுமாகும்.

இந்த படித்தரம் மிகவும் கன்னியம் வாய்ந்ததாகும். எனவே ஒவ்வொரு மு:்மினுடைய நோக்கமும் சிந்தனையும் அல்லாஹ்வுடைய திருப்தியை பெற்றுக் கொள்வதாகவே இருக்க வேண்டும். அவனுடைய கோபத்தை தவிர்த்துக் கொள்வது, அவனுடைய தண்டனையில் இருந்து பாதுகாத்துக் கொள்வது என்பதாகவே இருத்தல் வேண்டும். எந்தவொரு நன்மையை செய்வதற்கோ எந்தவொரு தீமையிலிருந்து விடுபடுவதற்கோ அல்லாஹ்வுடைய உதவி இல்லாமல் முடியாது.

02. இவ்வாறான முரண்பாடு பிரிவினையை உருவாக்குவதற்கோ சிக்கல்களை வளர்த்துக் கொள்வதற்கோ அவசியமற்றவை.

மாறாக அதை பிரிவினைக்குரிய வழியாக அமைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் முரண்பாட்டை பெரிதாக காட்டுவது ஷைத்தானின் தந்திரமாகும். மேலும், இந்த விடயத்தில் சத்தியத்தை விளக்குவதை கடமையான கட்டாயமான ஒரு விடயமாகவே ஷைத்தான் காட்டுகின்றான்.

மாறாக, நன்மையை ஏவி தீமையை தடுக்கின்ற கட்டாயம் செய்யப்பட வேண்டிய அவசியமான விடயங்களில் ஒன்றாக அதைக் காட்ட முற்படுகின்றான். இதனால், பிரச்சாரகர்கள் அதன் பின்னால் சென்று அதற்கு பதில் சொல்வதில் உத்வேகமடைகிறார்கள். முரண்படுபவரை ஏசுகின்றனர். அல்லது அவரை குறை கூறவும், அவருடைய அறிவில் சந்தேகத்தை ஏற்படுத்தவும், அவருடைய நோக்கத்தில் சந்தேகத்தை உருவாக்கவும் முயற்சிக்கின்றனர். இந்த முரண்பாட்டின் விளைவாக பிரிவினை உருவாகின்றது. இதுவே உண்மையான பாவமாகும். தெளிவான தடை செய்யப்பட்ட விடயமாகும்.

பனூ குறைழாக்கள் வசித்த இடத்திற்கு செல்கின்ற வழியில் அஸர் தொழுகையை தொழுதுவதில் ஸஹாபாக்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை நாம் சிந்திப்போமாயின், தொழுகை மிகவும் மகத்துவமானதாக இருந்த போதிலும், தொழுகையை அதனுடைய நேரத்தை விட்டு பிற்படுத்துவது ஹராமாக இருந்த போதிலும் இந்த விடயம் ஸஹாபாக்களுக்கு மத்தியில் முரண்பாட்டையோ பிளவுகளையோ ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்து கொள்வோம்.

03. இந்த முரண்பாட்டின் மூலம்: முரண்பட்டவர் அவசியம் பாவத்தினை சம்பாதிப்பார் என்று கருதுவது வழிகெட்ட

சிந்தனைப் பிரிவுகளினுடைய போக்காகும். அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருடைய போக்கு அல்ல. நிச்சயமாக அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் சிலர் சிலர் மீது இரக்கம் காட்டுகின்றனர். இதை விட ஒரு படி மேலே சென்று அவர்களுடன் முரண்படுபவர்கள் மீதும் இரக்கம் காட்டுகின்றனர்.

ஆனால், வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகளோ சிலர் சிலரை காபிர்கள் என்று சொல்கின்றனர். ஒவ்வொரு தவறும் கட்டாயமாக பாவமாகவே இருக்க வேண்டுமென்பதல்ல. ஏனெனில், அல்லாஹ் மூன்று விடயங்களை மனிதர்களுக்கு மன்னித்து விட்டான்: தவறு, நிர்ப்பந்தம், மறதியினால் ஏற்படுவபவையாகும். இவை மூன்றும் மனிதர்களுக்கு மன்னிக்கப்பட்டவைகளாகும். எனவே, விடயம் இவ்வாறு இருக்கையில் ஒவ்வொரு தவறையும் எப்படி பாவமாக கருத முடியும்.

அத்தோடு, சிறந்த நோக்கத்தோடு இஜ்திஹாத் செய்வதற்கு சக்தியுள்ள ஒருவர் இஜ்திஹாத் செய்கின்ற நேரம் தவறிழைத்தாலும் அவருக்கு ஒரு கூலி வழங்கப்படும் என்று தெளிவான ஆதாரங்கள் இருக்கின்ற நிலையில் இஜ்திஹாதின் மூலம் செயற்படுபவரை தீமை செய்தவராக அல்லது தண்டனைக்குரியவராக நாம் கருத முடியாது. இதனால், இந்த விடயம் முரண்பாட்டின் தீவிரத் தன்மையைக் குறைப்பதாகவும் பிரிவினையை அவசியப்படுத்தும் கடினப் போக்கை தடை செய்வதாகவும் உள்ளது.

04. முரண்படுபவருடைய ஆதாரங்களை கவனிப்பதும் கருத்துப்பறிமாற்றங்களின் நிபந்தனைகளுக்கேற்ப, அதனுடைய ஒழுங்குகளை பேணி அவருடன் கருத்துப் பரிமாறலில் ஈடுபடுவது அவசியமானதும் மார்க்க ரீதியாக வலியுறுத்தப்பட்ட விடயமுமாகும்.

சத்தியத்தை தேடுகின்ற ஒவ்வொரு ஆய்வாளருக்கும் இதுவே மார்க்க ரீதியான கடமையாகும். முஸ்லிம் சத்தியத்தை தேடுபவன். அவனது திறமையோ, அடுத்தவர்களை விட தன்னை உயர்வாக கருதுவதோ, முரண்படுபவர்களின் ஆதாரங்களை கேட்காமல் இருப்பதற்கு அவனை தூண்டாது. மாறாக, மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ளவும், இலக்குகளை அடைந்து கொள்ளவும், அவர்களுடைய ஆதாரங்களை கேட்பது அவசியமாகும். அறிவு என்பது ஒரு மு.'.மினின் தவறிய சொத்தாகும். அவன் எங்கு அதைப் பெற்றுக் கொண்டாலும் அதை எடுத்துக் கொள்வான் அவனே அதற்கு மிகவும் உரித்துடையவனாவான்.

இறுதியாக என்னுடைய சகோதரனே நீதமாக இருப்பதும், முரண்படுபவர் தனக்கு அநீதியிழைத்தாலும் அவரோடு நீதமாக நடந்து கொள்வதும் அவசியமாகும். அதையே இஸ்லாம் எமக்கு ஏவியுள்ளது. ஏனெனில், உன் விடயத்தில் அல்லாஹ்வுக்கு முரண்பட்டவனுக்கு அல்லாஹ்வை அவன் விடயத்தில் நீ வழிபடுவதைப் போன்று வேறு எந்த அடிப்படையிலும் அவனுக்கு பிரதி உபகாரம் செய்ய முடியாது. அல்லாஹ் அல்குர்ஆனில் சொல்கிறான்: ‘‘நிச்சயமாக யாரெல்லாம் அல்லாஹ்வை அஞ்சி நல்லவர்களாக வாழுகின்றார்களோ அவர்களுடன் அல்லாஹ் இருக்கிறான்’’ (16:128)

உலகத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

பொருளடக்கம்.

01. முன்னுரை
02. அல் இ.ீ.திலாப் (உடன்பாடு) அல் இஹ்திலாப் (முரண்பாடு) என்றால் என்ன?
03. ஒற்றுமை, உடன்பாடு, ஐக்கியம் என்பவற்றை இஸ்லாம் தூண்டுகின்றது கருத்து முரண்பாடு, பிரிவினையை தடை செய்கின்றது.
04. ஒற்றுமையைத் தூண்டி முரண்பாட்டைத் தடை செய்யும் ஹதீஸ்கள்.
05. ஒற்றுமை, உதவி செய்தல், கருத்து முரண்பாட்டை வெறுத்தல் தொடர்பில் உலமாக்களின் சில கூற்றுகள்.
06. விவாதங்கள் மற்றும் கருத்து பரிமாற்றங்களின் போது உணர்வுகள், விளக்கங்கள் வித்தியாசப்படுவது இயல்பான விடயம் அதைத் தவிர்க்க முடியாது.
07. கருத்து முரண்பாட்டின் எதார்த்தமும் வகைகளும் அவற்றின் சட்டங்களும்.
08. கருத்து முரண்பாடுகளின் வகைகளுக்கேற்ப பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குகள்.
09. கிளை அம்சங்களில் கருத்து முரண்பாடு கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரங்கள்.
10. பயனில்லாத விடயங்களில் கருத்து முரண்படுவதன் சட்டம்.
11. கருத்து முரண்பாடுகளின் காரணங்களுக்கேற்ப அதன் வகைகள்.
12. கருத்து முரண்பாட்டின் காரணங்கள்.
14. நபி (ஸல்), ஸஹாபாக்கள், தாபிஈன்களுடைய காலத்தில் கருத்து முரண்பாடுகளின் போது கடைபிடிக்கப்பட்ட ஒழுங்குகள்.

15. ஒற்றுமையும் விரிசல்களை தவிர்ந்து கொள்வதே வெற்றிக்கு அல்லாஹ்வின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான வழியாகும்.
16. முரண்பாடுகளை கையாளுவதற்கான செயன் முறைகள்.
17. பொருளடக்கம்.

الائتلاف والاختلاف

أسسه وضوابطه

بقلم الدكتور
صالح بن غانم السدلان
أستاذ الدراسات العليا
بجامعة الإمام محمد بن سعود الإسلامية بالرياض - قسم الفقه